
தினபூமி
thinaboomi.com
பூமி: 31 சுற்று: 155 சித்திரை 28
Regd. No.TRY/050/2023-2025 RNI Regn. No.61511/94
திருச்சி, ஞாயிறு, மே 11, 2025
சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**இந்தியா-பாக். பிரதமர்களின் விவேகம் பாராட்டுக்குரியது: அமெரிக்க அமைச்சர் புகழாரம்**
...2-ம் பக்கம்

**தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண நிதி அறிவித்தது காஷ்மீர் அரசு**
...3-ம் பக்கம்

**ரோகித் சர்மாவை தொடர்ந்து டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற கோலி முடிவு..?**
...6-ம் பக்கம்



### கடந்த 4 நாட்களாக நீடித்த

# இந்தியா - பாகிஸ்தான் போர் முடிவுக்கு வந்தது

## தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்பு

புதுடில்லி, மே 11-

**இந்திய-பாகிஸ்தான் இடையே கடந்த 4 நாட்கள் நீடித்த போர் முடிவுக்கு நேற்று மாலை 5 மணியுடன் முடிவுக்கு வந்தது. இதை மத்திய அரசு அதிகாரப்பூர்வ அறிவித்தது. இந்த போர் நிறுத்தத்திற்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்பு தெரிவித்துள்ளார். மேலும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் வரவேற்பு தெரிவித்துள்ளன.**

**சிந்தூர் நடவடிக்கை...**

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக இந்தியா ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மேற்கொண்டு பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்ப காஷ்மீரில் உள்ள 9 பயங்கரவாத முகாம்களை அழித்தது. இதனால் இந்தியா மீது பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது. இந்தியாவும் பதிலடி கொடுத்தது. இந்தியா - பாகிஸ்தான் இடையில் தீவிரமக போர் மூளும் சூழ்நிலை ஏற்பட்டது. இந்தியா- பாகிஸ்தான் இடையிலான பதற்றத்தை தணிக்க அமெரிக்கா தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வந்தது.



விக்ரம் மிஸ்ரி

**பதற்றம் முடிவுக்கு....**

இந்த நிலையில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் சண்டை நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டுள்ளன. இது உடனடியாக அமலுக்கு வருகிறது என டொனால்டு டிரம்ப் தெரிவித்தார். பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் இஷாக் தார் இந்தியாவும் பாகிஸ்தானும் சண்டை நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டுள்ளது எனத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து இந்தியா சண்டை நிறுத்தத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது என வெளியுறவுத் துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார். இதனால் இருநாடுகளுக்கும் இடையிலான பதற்றம் முடிவுக்கு வந்துள்ளது.

**அனைத்து ராணுவ...**

இது தொடர்பாக வெளியுறவுத்துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரி நிருபர்களிடம் கூறியதாவது:-

பாகிஸ்தானின் ராணுவ நடவடிக்கைக்கான இயக்குநர் ஜெனரல் (டிஜிஎம்ஓ) நமது நாட்டு டிஜிஎம்ஓ., வை மாலை 3: 35 (நேற்று) மணிக்கு அழைத்து பேசினார். அப்போது, மாலை 5:00 மணி (நேற்று) முதல் தரை, வான் மற்றும் கடல் வழியாக அனைத்து ராணுவ நடவடிக்கைகளையும், துப்பாக்கிச்சூட்டையும் நிறுத்தி கொள்வது என இருதரப்பும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இது குறித்து இரு தரப்பும் உரிய அறிவுரைகளை வழங்கி உள்ளது. இருநாட்டு டி.ஜி.எம்.ஓ.,க்களும் வரும் 12ம் தேதி நண்பகல் 12 மணிக்கு பேசுவார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

**பாக்., துணை பிரதமர்**

முன்னதாக, இந்தியா - பாகிஸ்தானும் சண்டை நிறுத்தத்திற்கு ஒப்பு கொண்டதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டார். இதனையடுத்து இந்தியாவும் பாகிஸ்தானும் உடனடியாக போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டதாக பாகிஸ்தான் துணை பிரதமர் இசாக் தார் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அவரது பதிவில், பாகிஸ்தானும் இந்தியாவும் உடனடியாக போர் நிறுத்தத்திற்கு ஒப்பு கொண்டது. பாகிஸ்தான் எப்போதும் தனது இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டில் சமரசம் செய்யாமல், பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பிற்காக பாடுபட்டு வருகிறது என்று பதிவிட்டுள்ளார்.

**முதல்வர் வரவேற்பு...**

இந்நிலையில் இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போர் நிறுத்தத்திற்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் வரவேற்பு தெரிவித்துள்ளன. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினும் இதற்கு வரவேற்பு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, இந்தியா - பாகிஸ்தான் இடையேயான தாக்குதல் நிறுத்தம் வரவேற்கத்தக்கது. நமது எல்லையை காக்கும் துணிச்சல் மிக்க வீரர்களுக்கு வணக்கம்; அமைதி நிலைத்திருக்கட்டும் என தெரிவித்துள்ளார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று இந்திய இராணுவத்திற்கு துணை நிற்கும் பேரணி, சென்னையிலுள்ள காவல் துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து காமராசர் சாலையில் உள்ள போர் நினைவுச்சின்னம் வரை நடைபெற்றது. இப்பேரணியில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கட்சித் தலைவர்கள், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள், காவல்துறை தலைமை இயக்குநர் உள்ளிட்ட காவல் துறை உயர் அலுவலர்கள், முன்னாள் படைவீரர்கள், அனைத்து மத தலைவர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் திரளாக கலந்து கொண்டனர்.

### ராணுவத்துக்கு ஆதரவாக சென்னையில் பேரணி:

# முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்கள் பங்கேற்பு

சென்னை, மே 11-

**நாட்டின் பாதுகாப்புக்காக சேவையாற்றி வரும் ராணுவத்துக்கு ஆதரவாக சென்னையில் நேற்று மாலை முதல்வர் மு. க. ஸ்டாலின் தலைமையில் பேரணி நடைபெற்றது. இதில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், எம்.பி.க்கள், காவல் துறை மற்றும் பிற அரசுத் துறைகளைச் சேர்ந்த உயரதிகாரிகள் மட்டுமில்லாது திரளான மக்களும் பங்கேற்றனர்.**

இந்திய ராணுவத்தின் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையை தொடர்ந்து இந்தியா-பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் அதிகரித்தது. எல்லையில் அத்துமீறி இந்திய பகுதிகளை குறிவைத்து கடந்த சில தினங்களாக பாகிஸ்தான் தாக்க முயற்சித்து வருகிறது. இந்த தாக்குதல் முயற்சியை இந்திய ராணுவம் முறியடித்து வருகிறது.

இந்த நிலையில், பாகிஸ்தானின் தாக்குதலை துணிவுடன் எதிர்கொள்ளும் இந்திய ராணுவ படைகளுக்கு ஆதரவாக சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தற்போது பிரம்மாண்ட பேரணி நடைபெற்றது.

இந்திய ராணுவத்திற்கு தமிழக மக்கள் சார்பில் ஆதரவையும், ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தும் விதமாக இந்த பேரணி நடத்தப்பட்டது. சென்னையில் காமராஜர் சாலையில் உள்ள தமிழ்நாடு காவல்துறையின் தலைமை அலுவலகமான டி.ஜி.பி. அலுவலகத்தில் இருந்து தொடங்கி போர் நினைவுச் சின்னம் வரை சுமார் 4 கி.மீ. தூரத்திற்கு இந்த பேரணி முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது.

சென்னை டிஜிபி அலுவலகத்திலிருந்து தீவுத் திடல் போர் நினைவுச் சின்னம் அருகே பேரணியாக தேசியக் கொடியை உயர்த்திப் பிடித்தபடி மக்களுடன் இணைந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பேரணியை வழிநடத்திச் சென்றார்.

இதில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், எம்.பி.க்கள், காவல் துறை மற்றும் பிற அரசுத் துறைகளைச் சேர்ந்த உயரதிகாரிகள் மட்டுமில்லாது திரளான மக்கள் உள்ளிட்ட 15 ஆயிரம் பேர் பங்கேற்றனர்.

### எல்லையில் பாகிஸ்தான் தாக்குதல்:

# இந்திய ராணுவ வீரர் வீரமரணம்

ஸ்ரீநகர், மே 11-

**காஷ்மீரில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த மராட்டிய ரெஜிமெண்ட்டைச் சேர்ந்த சிப்பாய் சச்சின் வனான்ஜி என்ற ராணுவ வீரர் வீரமரணம் அடைந்துள்ளார்.**

பெஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக, பாகிஸ்தான் மீது இந்தியா துல்லியத் தாக்குதலை நடத்தியது. இதன் தொடர்ச்சியாக, இந்தியாவின் எல்லை மாநிலங்கள் மீது பாகிஸ்தான் ராணுவம் வான்வெளி தாக்குதலை நடத்தி வருகிறது. கடந்த மூன்று தினங்களாக எல்லைப்பகுதியில் பாகிஸ்தானின் அத்துமீறல் நீடித்து வருகிறது. இதற்கு தக்க பதிலடி தாக்குதலை இந்திய ராணுவமும் கொடுத்து வருகிறது.



இருப்பினும் பாகிஸ்தான் தொடர்ந்து மக்கள் வசிக்கும் பகுதிகளில் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், காஷ்மீரில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த மராட்டிய ரெஜிமெண்ட்டைச் சேர்ந்த சிப்பாய் சச்சின் வனான்ஜி என்ற ராணுவ வீரர் வீர மரணம் அடைந்துள்ளார்.

### பஞ்சாப் மாநிலத்திலிருந்து

# 5 தமிழக மாணவர்கள் சென்னை திரும்பினர்

சென்னை, மே 11-

**பஞ்சாப் மாநில எல்லைப் பகுதிகளில் பாகிஸ்தான் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் நிலையில், பாதுகாப்பு கருதி, பஞ்சாப் மாநிலம் ஜலந்தரிலிருந்து புறப்பட்ட 5 தமிழக மாணவர்கள் நேற்று காலை விமானம் மூலம் சென்னை வந்தனர்.**

நேற்று காலை சென்னை விமான நிலையம் வந்தடைந்த மாணவர்களை அவர்களது பெற்றோர் வரவேற்றனர். விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய மாணவர்கள், தாங்கள் தங்கியிருந்த இடத்தில் ட்ரோன் தாக்குதல் நடந்ததாகவும், பாதுகாப்புக் கருதியே அங்கிருந்து புறப்பட்டு சென்னை வந்து சேர்ந்ததாகவும், பல மாணவர்கள் தொடர்ந்து சென்னை திரும்பிக்கொண்டிருப்பதாகவும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

அங்கு நிலைமை சரியில்லாத காரணத்தால் பஞ்சாபிலிருந்து புறப்பட்டு தமிழகம் வந்துவிட்டோம். தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் பஞ்சாப் கல்லூரிகளில் தங்கி படித்து வருவதாகவும், தமிழகத்தைச் சேர்ந்த மேலும் 7 மாணவர்கள் இன்று பிற்பகலில் சென்னை வர உள்ளனர் என்றும் மாணவர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

### முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும்

# 5,650 பயனாளிகளுக்கு தலா ரூ.25,000 மானியத் தொகை

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, மே 11-

**முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும் 5,650 பயனாளிகளுக்கு தலா ரூ.25,000 மானியத் தொகையை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.**

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (10.5.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்பவர்களுக்கு ஹஜ் மானியமாக 5,650 பயனாளிகளுக்கு தலா ரூ.25,000/- வீதம் மானியத் தொகை வழங்கிடும் அடையாளமாக, 10 பயனாளிகளுக்கு ஹஜ் மானியத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

2024-25-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், முதல்வர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, முதல் முறையாக ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் தகுதி வாய்ந்த ஹஜ் பயணிகள் ஒவ்வொருவருக்கும் ஹஜ் மானியத் தொகை இந்த ஆண்டு முதல் 25,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டு தமிழ்நாடு அரசால், 14 கோடியே 12 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தகுதியுள்ள பயணி ஒருவருக்கு ரூ.25,000 வீதம் 5,650 பயனாளிகளுக்கு இம் மானியத் தொகை வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக, 10 பயனாளிகளுக்கு முதல்வர் நேற்று தலா ரூ.25,000 க்கான காசோலைகளை ஹஜ் மானியத் தொகையாக வழங்கினார் என தெரிவிக்கப்பட்டுள்ளது .

# வரும் 14-ம் தேதி வரை மழைக்கு வாய்ப்பு

சென்னை, மே 11-

**தமிழகத்தில் வரும் 14-ம் தேதி வரை மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தென்னிந்திய பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு பகுதிகளில், கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுகிறது. தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு அந்தமான் கடல் பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தென்மேற்கு பருவமழை அந்தமான் கடல் மற்றும் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் வருகின்ற 13-ம் தேதி வாக்கில் துவங்கக்கூடும்.

தமிழகத்தில் வரும் 12-ம் தேதி வரை ஓரிரு இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 13 மற்றும் 14-ம் தேதிகளில் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 30-40 கி.மீட்டர் வேகத்தில்) லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, ஈரோடு, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கேரளாவில் தென்மேற்கு பருவ மழை 27-ம் தேதி தொடங்குகிறது

## வானிலை ஆய்வு மையம் தகவல்

புதுடெல்லி, மே 11-

**கேரளாவில் தென்மேற்கு பருவமழை வழக்கத்தை விட (ஜூன் 1) நான்கு நாட்களுக்கு முன்னதாக மே 27ம் தேதியில் தொடங்கும் என்று வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.**

இந்தியாவின் முதன்மையான பருவமழை வழக்கமாக ஜூன் 1-ம் தேதி கேரளாவை வந்தடையும். இந்திய வானிலை ஆய்வு மையம், கடந்த 2023-ம் ஆண்டில் பருவமழை சராசரியாக, 96 சதவீதமாக இருக்கும் என்று கணித்திருந்தது. என்றாலும் உண்மையில் அந்த ஆண்டு சராசரி அளவை விட குறைவாக 94 % மழையே பதிவாகியிருந்தது.

எல் நினோவினால் அந்த ஆண்டு பருவமழை நீண்ட கால சராசரி அளவான 868.6 மி.மீ. அளவை விட குறைவாக 820 மி.மீ. மட்டுமே பதிவாகியிருந்தது. 2023-ம் ஆண்டுக்கு முன்பாக தொடர்ந்து நான்கு ஆண்டுகள் இந்தியா சரசாரி மற்றும் சராசரிக்கும் கூடுதலான மழையை பெற்றுள்ளது.

கடந்த ஆண்டு (2024) நீண்ட கால சராசரியை விட கூடுதலாக 108 சதவீதம் மழை பதிவாகி இருந்தது. வானிலை ஆய்வு மையத்தின் எதிர்பார்ப்புப்படி, வரும் மே 27-ம் தேதி பருவமழை தொடங்கினால், கடந்த 2009-ம் ஆண்டு மே 23-ம் தேதி பருமழை தொடங்கியதற்கு பின்பு, இந்தியாவின் முக்கியமான நிலப்பரப்பில், முன்கூட்டியே பருவமழை தொடங்குவது இதுவாகத்தான் இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# தமிழகத்திலிருந்து பாக்.கிற்கு மருந்து ஏற்றுமதி நிறுத்தம்

சென்னை, மே 11-

**தமிழகத்திலிருந்து பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மருந்துகள் முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளன.**

இந்தியா-பாகிஸ்தான் இடையே மோதல் அதிகரித்துள்ள நிலையில், இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பெற்று வரும் அனைத்து வகையான பலன்களையும், சலுகைகளையும் தடை செய்ய மத்திய அரசு முடிவு செய்தது. அதன்படி மருந்து ஏற்றுமதியை நிறுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

அந்த வகையில் தமிழகத்திலிருந்து பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மருந்துகள் முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளன. உயிர் காக்கும் முக்கிய மருந்துகளுக்கான மூலப்பொருள்கள் எதுவும் இனி தமிழகத்திலிருந்து பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட மாட்டாது என்று மாநில மருந்து உற்பத்தியாளர்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர். இதனால் ரூ.100 கோடி வரை வருவாய் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இருப்பினும், நாட்டின் நலனைக் கருத்தில்கொண்டு இந்த முடிவை எடுத்துள்ளதாக மருந்து உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
| --- | --- |
| -880.34 | -265.80 |
| பாயின்ட் 79,454.47 | பாயின்ட் 24,008.00 |



**தங்கம்**
1 சவரன் ₹72,360
1 கிராம் ₹9,045



**வெள்ளி**
1 கிலோ ₹110,000
1 கிராம் ₹110.00

**டாலர்** ₹85.42

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24


# இந்தியா-பாக். பிரதமர்களின் விவேகம் பாராட்டுக்குரியது

## அமெரிக்க வெளியுறவு அமைச்சர் புகழாரம்

**வாஷிங்டன், மே 11-**

இந்தியா-பாகிஸ்தான் பிரதமர்களின் விவேகம் பாராட்டுக்குரியது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் கடந்த ஏப்ரல் 22-ந் தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்களை இந்திய ராணுவம் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை மூலம் தாக்கி அழித்தது. இந்திய ராணுவத்தின் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையை தொடர்ந்து எல்லையில் அத்துமீறி இந்திய பகுதிகளை குறிவைத்து கடந்த சில தினங்களாக பாகிஸ்தான் தாக்க முயற்சித்தது. இந்த தாக்குதல் முயற்சிகளை இந்திய ராணுவம் தொடர்ந்து முறியடித்து வந்தது.



இந்த நிலையில், தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளுக்கு பிறகு இந்தியாவும், பாகிஸ்தானும் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ளார். இதை இந்திய அரசும், பாகிஸ்தான் அரசும் உறுதி செய்துள்ளன.

இந்நிலையில், இந்தியா-பாகிஸ்தான் பிரதமர்களின் விவேகம் பாராட்டுக்குரியது என அமெரிக்கா தெரிவித்துள்ளது. இது குறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை செயலாளர் மார்க்கோ ரூபியோ வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது ;- இந்தியா மற்றும் பாகிஸ்தான் அரசாங்கங்கள் உடனடி போர்நிறுத்தத்திற்கு ஒப்புக் கொண்டுள்ளதையும், நடுநிலையான தளத்தில் பரந்த அளவிலான பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தைகளை தொடங்க உள்ளதையும் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அமைதி பாதையைத் தேர்ந்தெடுத்த பிரதமர் மோடி மற்றும் பிரதமர் ஷெரீப்பின் ஞானம், விவேகம் மற்றும் அரசியல் திறமையை நாங்கள் பாராட்டுகிறோம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம்: டிரம்ப் அறிவிப்பு

**வாஷிங்டன், மே 11-**

இந்தியாவும் பாகிஸ்தானும் போர் நிறுத்தத்துக்கு செய்ய ஒப்புக் கொண்டு உள்ளதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.

பயங்கரவாத தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் பாகிஸ்தானில் செயல்படும் பயங்கரவாத முகாம்களை குறிவைத்து இந்திய ராணுவம் தாக்குதலை நடத்தியது. இதனையடுத்து பாகிஸ்தான், நமது நாட்டு ராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்தி பதற்றம் நிலவுகிறது. பாகிஸ்தானின் ஒவ்வொரு அத்துமீறலுக்கும் இந்தியா பதிலடி கொடுத்து வருகிறது.

தாக்குதல் துவங்கியது முதல் இரு நாடுகளும் பதற்றத்தை தணிக்க வேண்டும் என பல நாடுகள் வலியுறுத்தி வந்தன. சீனாவும் அதேபோன்ற கருத்தை தெரிவித்து இருந்தது. இரு நாடுகளும் விரைவில் பதற்றத்தை தணிக்கும் என நம்புவதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியிருந்தார்.

இந்நிலையில் டிரம்ப் வெளியிட்ட அறிக்கையில், ஒரு நாள் இரவு முழுவதும் அமெரிக்க அரசு சார்பில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் முடிவில், இந்தியாவும், பாகிஸ்தானும் போர் நிறுத்தம் செய்ய ஒப்புக் கொண்டுள்ளன என்பதை அறிவிக்கிறேன். அறிவுப்பூர்வமாக செயல்பட்ட இரு நாடுகளுக்கும் வாழ்த்துகள் எனத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் துணை பிரதமர் மற்றும் வெளியுறவு அமைச்சர் இஷாக் தர் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: உடனடியாக போர் நிறுத்தம் செய்ய இந்தியாவும் பாகிஸ்தானும் ஒப்புக் கொண்டு உள்ளன. பாகிஸ்தான் எப்போதும் அதன் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒற்றுமையை பாதிக்காத வகையில் இந்த பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு பாடுபடும் எனத் தெரிவித்து உள்ளார்.

இந்தியா சார்பில் வெளியுறவுத்துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரியும், போர் நிறுத்தம் செய்வதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

## பாகிஸ்தானில் உள்ள

# பயங்கரவாத ஏவுதளங்கள் அழிப்பு: இந்திய ராணுவம் வீடியோ வெளியீடு

**புதுடெல்லி, மே 11-**

பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகளின் ஏவுதளங்களை வெற்றிகரமாக அழித்துள்ளதாக அறிவித்துள்ள இந்திய ராணுவம் அதுதொடர்பான வீடியோவையும் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக ராணுவம் எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ள பதிவில், மே 8 - 9 இடைப்பட்ட இரவில் ஜம்மு-காஷ்மீர் மற்றும் பஞ்சாபின் பல பகுதிகளில் பாகிஸ்தான் மேற்கொண்ட ட்ரோன் தாக்குதல் முயற்சிகளுக்கான பதிலடியாக இந்திய ராணுவம் பயங்கரவாதிகளின் ஏவுதளங்களைக் குறிவைத்து அழித்தது. அவை தடம் தெரியாமல் அழிக்கப்பட்டன.

இந்த ஏவுதளங்கள் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டின் அருகே அமைந்துள்ளன. இங்கிருந்துதான் இந்திய மக்கள் மீதும், பாதுகாப்புப் படையினர் மீதும் பயங்கரவாத தாக்குதல் சதிகள் முன்பு நடத்தப்பட்டன. இந்திய ராணுவத்தின் அதிரடியான மற்றும் தீர்க்கமான நடவடிக்கைகள் பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத கட்டமைப்புகள் மற்றும் பயங்கரவாதிகளின் இயங்குதிறனுக்கு பலத்த அடியாக இறங்கியுள்ளது." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'ஆபரேஷன் சிந்தூர்' முழுவதையும் ஆவணப்படுத்தும் இந்திய ராணுவம்

**காஷ்மீர், மே 11-**

ஆபரேஷன் சிந்தூர்' முழுவதையும் இந்திய ராணுவம் ஆவணப்படுத்தி வருகிறது.

கடந்த 2016-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18-ம் தேதி ராணுவ முகாம் மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில், 19 வீரர்கள் வீரமரணம் அடைந்தனர். அந்த தாக்குதல் நடந்து 11 நாட்களுக்கு பிறகு உரி சர்ஜிக்கல் தாக்குதலை இந்தியா நடத்தியது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது இந்திய ராணுவம் நடத்திய அதிரடி தாக்குதலில் சுமார் 50 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

கடந்த 2019-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் தேதி புல்வாமாவில் பாதுகாப்பு படையினர் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 40 வீரர்கள் உயிரிழந்தனர். ஜெய்ஷ் இமுகம்மது இயக்கத்தின் தற்கொலைப் படை இந்த தாக்குதலை நடத்தியது. அதற்கு பதிலடியாக 13 நாட்கள் கழித்து இந்தியா சர்ஜிக்கல் தாக்குதல் நடத்தியது.

இந்தியாவின் மிராஜ் 2000 போர் விமானங்கள் மூலம் பாகிஸ்தானின் கைபர் பகதுன்க்வா மாகாணத்தில் உள்ள பாலகோட் பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் ஜெய்ஷ் இ முகமது இயக்கத்தின் முகாம்களில் இருந்த தீவிரவாதிகள் ஏராளமானோர் கொல்லப்பட்டனர். இந்த சர்ஜிக்கல் ஸ்டிரைக் எனப்படும் துல்லிய தாக்குதல் நடத்தியதை மத்திய அரசு அறிவித்த போது, முக்கிய எதிர்க்கட்சிகள் அதற்கு ஆதாரங்களை கேட்டன. ராணுவத்தின் நடவடிக்கையை குறைத்து மதிப்பிடும் வகையில் ஆதாரம் கேட்டவர்களுக்கு பலதரப்பினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்நிலையில் ஆபரேஷன் சிந்தூர் தாக்குதல் முழுவதையும் இந்திய ராணுவம் ஆவணப்படுத்தி வருகிறது. முன்னதாக தீவிரவாதத்துக்கு எதிராக எந்த நடவடிக்கை எடுத்தாலும் முழு ஆதரவு அளிப்பதாக மத்திய அரசுக்கு அனைத்துக் கட்சிகளும் ஆதரவு தெரிவித்தன.

எனினும், சிந்தூர் தாக்குதல் குறித்து வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்த இந்திய ராணுவம் வீடியோவாகவும் ஆவணங்களாகவும் சேகரித்து வருகிறது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# ஆபரேஷன் சிந்தூர் தாக்குதல்: கண்ணீர் விட்ட பாக். எம்.பி.

**லாகூர், மே 11-**

ஆபரேஷன் சிந்தூர் தாக்குதல் குறித்து பாக். எம்.பி. கண்ணீர் விட்டது பாகிஸ்தானில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் ராணுவத்தில் மேஜராக பணியாற்றியவர் தாஹிர் இக்பால். தற்போது பாகிஸ்தானில் ஆளும் பாகிஸ்தான் முஸ்லீம் லீக் கட்சியின் மூத்த தலைவராகவும் எம்.பி. யாகவும் இருக்கிறார். பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதல் நடத்த தொடங்கிய போது, கடந்த 8-ம் தேதி நாடாளுமன்றத்தில் அவர் பேசினார்.

தாஹிர் இக்பால் பேசும் போது, ''இந்தியாவின் தாக்குதலில் இருந்து பாகிஸ்தானை ராணுவம் காப்பாற்ற வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் பாகிஸ்தானின் அனைத்து எம்.பி.க்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று வேண்டுகிறேன். கடவுளிடம் பிரார்த்தனை செய்யுங்கள். ஓ அல்லா. உமக்கு முன்னால் நாங்கள் தலைவணங்கி நிற்கிறோம். தயவு செய்து இந்த நாட்டை காப்பாற்று'' என்று உணர்ச்சியை கட்டுப்படுத்த முடியாமல் அழுதபடியே பேசினார். அவரது பேச்சு சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது.

# வெடிக்காத சீன ஏவுகணை பஞ்சாபில் கண்டெடுப்பு

**பஞ்சாப், மே 11-**

வெடிக்காத ஏவுகணை பஞ்சாப்பில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பஞ்சாபின் ஹோசியார்பூர் பகுதியில் வெடிக்காத ஏவுகணை ஒன்று நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டது. இது குறித்து பாஜக.,வின் ஐ.டி பிரிவு தலைவர் அமித் மால்வியா எக்ஸ் தளத்தில் விடுத்துள்ள செய்தியில், ''சீனாவின் பிஎல்-15 ரக ஏவுகணை பஞ்சாபின் ஹோசியார்பூரில் மீட்கப்பட்டுள்ளது. இது பாகிஸ்தான் விமானப்படைக்கு சீனா வழங்கிய ஜே.எப்-17 ரக போர் விமானத்தில் இருந்து வீசப்பட்ட தொலை தூர ஏவுகணையாக இருக்கலாம். இது வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டுள்ளது'' என தெரிவித்துள்ளார். இந்த ஏவுகணை குறித்து ஆய்வு நடத்தப்படும் என தெரிகிறது.

# இன்று சித்திரை முழுநிலவு மாநாடு: புதுச்சேரியில் மதுக்கடைகள் அடைப்பு

**புதுச்சேரி, மே 11-**


சித்திரை முழுநிலவு வன்னியர் சங்க மாநாடு இன்று மாமல்லபுரம் அருகே நடைபெறுகிறது. இந்த மாநாட்டுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகிறது. புதுச்சேரி வழியாக வருவோர் கிழக்கு கடற்கரை சாலையை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி திண்டிவனம் வழியாக செங்கல்பட்டு சென்று அங்கிருந்து மாமல்லபுரம் செல்ல வேண்டும் என தமிழக காவல்துறை அறிவுறுத்தியுள்ளது. மாநாட்டுக்கு வரும் தொண்டர்களால் அசம்பாவிதம் ஏற்படுவதை தடுக்க புதுச்சேரி கலால்துறை மதுக்கடைகளை மூட உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது குறித்து புதுச்சேரி கலால்துறை இணை ஆணையர் மேத்யு பிரான்சிஸ் வெளியிட்டுள்ள உத்தரவில், "புதுச்சேரியில் உள்ள சாராயம், கள், பார் உட்பட அனைத்து மது விற்பனைக் கூடங்களையும் இன்று மதியம் 1 மணி முதல் மூட உத்தரவிடப்பட்டுள்ளது.

சித்திரை முழுநிலவு இளைஞர் மாநாடு மாமல்லபுரத்தில் நடைபெற இருப்பதையொட்டி அசம்பாவித சம்பவங்கள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் இந்த தடுப்பு நவடிக்கை எடுக்கப்படுகிறது.'' என்று அவர் கூறியுள்ளார்.

**11-05-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** தொழில் விரிவாக்கத்துக்கு அரசு ஆதரவும், அதிகாரிகளால் அனுகூலம் ஏற்படும். சாஸ்திர பயிற்சியில் தெளிவு ஏற்படும். தனலாபம், புதிய நண்பர்கள் சேர்க்கை என புதிய உற்சாகங்கள் பொங்கும்.

**ரிஷபம்:-** எதிர்பார்த்த இடங்களில், இருந்து பல நாட்களுக்குப் பிறகு, எதிர்பார்த்த தனவரவு உண்டாகும். பால்ய நண்பரை சந்திந்து மகிழ்வீர்கள். இதுவரை இருந்து வந்த உடல் உபாதைகள் நீங்கும்.

**மிதுனம்:-** திறமையுடன் செயல்பட்டாலும் இகழ்ச்சியே மிஞ்சும். பெண்களால் பணம் விரயமாகும். கோபத்தைக் குறைப்பது நல்லது. வியாபாரிகளுக்கு இலாபங்கள் ஓரளவு குறையும்.

**கடகம்:-** அரசிடம் இருந்து எதிர்பார்க்கும் உதவிகள் தாமதப்படும். வேண்டாத விவகாரங்களால் மனக்கவலை ஏற்படலாம். மனைவியால் குடும்பத்தினரிடையே ஒற்றுமை குறையலாம்.

**சிம்மம்:-** வாகன சுகங்கள் சிறப்பாக இருக்கும். மற்றவர்கள் பொறாமை கொள்ளும் அளவுக்கு உயர்வீர்கள். காதலில் விழ நேரலாம். மனைவி மூலம் நன்மைகள் ஏற்படும்.

**கன்னி:-** நண்பர்களே மோசம் செய்வார் எனவே, எவரிடமும் எச்சரிக்கையாக இருக்கவும். மற்றவர் விவகாரங்களில் மூக்கை நுழைக்காதிருப்பது நல்லது. காரியத் தடைகள் ஏற்பட்டு ஆர்வம் குறையும்.

**துலாம்:-** தனலாபம், குடும்பத்தில் நிம்மதி, சுகம் ஆகியவை அதிகரிக்கும். மனத்தெம்பும், மன மகிழ்ச்சியும் ஏற்படும். மனைவியின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பணவரவு உண்டு.

**விருச்சிகம்:-** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். குடும்பத்தினரிடையே வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. கவனமாகப் படித்து கல்வியில் சிறப்பு எய்தலாம்,

**தனுசு:-** உங்கள் இனிய பேச்சு சாதுர்யத்தால் எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி அடைவீர்கள். வியாபாரிகளுக்கு பேச்சே மூலதனமாகும். அரசால் ஆதாயம் உண்டு.

**மகரம்:-** உங்கள் செயல்களில் வெற்றி பெற மிகுந்த அக்கறை எடுக்க நேரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும், முன்னேற்ற வாய்ப்புகள் கதவைத் தட்டும். பயணத்தில் தடைகள் ஏற்படலாம்.

**கும்பம்:-** பெண்களால் லாபம் ஏற்படும். திருமணம் போன்ற சுபகாரியங்கள் மற்றும் எல்லா வகையிலும் நன்மைகள் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு.

**மீனம்:-** தொழில், வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படும். கவனமாக இருக்கவும். பெண்களால் குடும்பத்தில் கலகம் உருவாகலாம். வழக்குகளை தள்ளிப் போடுவது நல்லது.



அரசு பொறுப்பேற்று நான்காண்டுகள் செய்த சாதனைகளுக்காகவும், 5-ம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டியும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை முகாம் அலுவலகத்தில், கவிப்பேரரசு வைரமுத்து சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

## விளாங்குடி பகுதி செயலாளர் கே.ஆர்.சித்தன் தலைமையில் நீர்,மோர் பந்தல் திறப்பு:

# மக்களுக்கு நல்லது செய்வதை தடுக்க நினைப்பவர்கள் எந்த முறையில் வந்தாலும் அவர்களை வேரறுப்போம்

## முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ பேட்டி

**மதுரை, மே 11-**

விளாங்குடி பகுதி செயலாளர் கே.ஆர்.சித்தன் தலைமையில் நீர்,மோர் பந்தல் திறந்து வைத்து மக்களுக்கு நல்லது செய்வதை தடுக்க நினைப்பவர் எந்த முறையில் வந்தாலும் அவனை வேரறுப்போம் என்று முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

மதுரை மாநகர் மாவட்ட மேற்கு 6- ம் பகுதி அ.தி.மு.க.சார்பில் பகுதி செயலாளர் விளாங்குட கே.ஆர். சித்தன் ஏற்பாட்டில் விளாங்குடி பேருந்து நிலையம் அருகே பொதுமக்களுக்கு நீர்,மோர், சர்பத் மற்றும் தர்பூசணி பழங்களை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ். பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், பரவை ராஜா, வி.பி.ஆர்.செல்வகுமார், வக்கீல் தமிழ்செல்வன், விநாயகமூர்த்தி, வி.கணேசன், பகுதி முத்துவேல், மலர்விழி மற்றும் வட்ட செயலாளர்கள் கறிக்கடை மலைச்சாமி, பி.என்.சுந்தர்ராஜன், சேகவன், விஜயகுமார், நாராயணன், ஜஸ்டிஸ்ராஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பின்னர் மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க.செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது-

மதுரை விளாங்குடி பகுதியில் ஏற்கனவே காவல்துறையிடம் அனுமதி கோரி விண்ணப்பித்து பொதுமக்களுக்காக நீர்-மோர் பந்தல் திறந்து வைத்தோம்.திறந்து வைத்த 2 நாட்களில் தமிழகத்தில் எங்குமே இல்லாத அளவில் கூடல்புதூர் காவல் துறையினர் நீர்,மோர் பந்தலை அகற்றினர்.

கஞ்சா மற்றும் போதை பொருள்களை எளிதாக விற்கலாம். ஆனால் மக்களுக்கு நீர்,மோர் கொடுக்கக் கூடாது. இச்சம்பவம் குறித்து மாநகராட்சி ஆணையாளரிடம் கேட்டதற்கு, மதுரையில் அதிமுக சார்பில் மாநகர் பகுதிகளில் நீர் மோர் பந்தல் திறப்பதற்கு நாங்கள் தடை விதித்ததில்லை. நீர்-மோர் வழங்குவது தொடர்பாக நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தோம். அதற்கு நீதிபதி கூடல் புதூர் காவல் நிலைய ஆய்வாளரிடம் கேள்வி எழுப்பினார். காவல்துறையின் நடவடிக்கைக்கு கண்டனம் விதித்து, நீதிமன்றத்தில் வெற்றி பெற்று மீண்டும் நீர், மோர் பந்தலை திறந்து உள்ளோம். இதே கூடல் புதூர் காவல் நிலைய எல்லைக் குட்பட்ட பகுதியில் மாநகராட்சி அனுமதி பெற்று தான் திமுகவினர் நீர் மோர் பந்தல் திறந்து உள்ளார்களா.?



காவல்துறை இன்றைக்கு ஏவல் துறையாக மாறிவிட்டது. இதுபோன்ற காவலர்களை கணக்கெடுத்துள்ளோம் ஆட்சி மாறும்., காலம் மாறும் ஏவல் துறையாக செயல்பட்ட காவலர்கள் எங்கே இருப்பார்கள் என்றே தெரியாது. உடனே அதிமுக அமைச்சர்கள் கைகாலை பிடித்து விடுவார்கள். இதே பகுதி செயலாளர் சித்தனை தேடி வருவார்கள். சித்தா பாத்துக்க..? அப்படி யாராவது தேடி வந்தா பார்த்துக் கொள்வோம்.காவல் துறை பொய் வழக்கு போடுகிறது. ரேடியோ செட் போடுவதற்கு அனுமதி கேட்டிருந்தோம்.எங்கள் பகுதிசெயலாளரை காவல்துறையினர் மிரட்டுகிறார்கள். தூக்கி உள்ள வச்சுருவோம். கஞ்சா கேஸ் போடுவோம் என மிரட்டுகிறார்கள். விடிய விடிய டாஸ்மாக் வியாபாரம் நடக்கிறது இதெல்லாம் போலீஸ்காரருக்கு தெரியவில்லை.? நாங்கள் உண்மையிலேயே காவல்துறையை மதிப்பவன்., சட்டத்திற்கு புறம்பாக கிரிமினலுக்காக ஆதரவாக நான் இதுவரை காவல் நிலையத்திற்கு சென்றது கிடையாது.

மக்களுக்கு நல்லது செய்ய நினைக்கும் நபர்களை தடுக்கும் எவனாக இருந்தாலும் சரி காவல்துறையாக இருந்தாலும்., அரசியல்வாதியாக இருந்தாலும் எவனுக்கும் மரியாதை கிடையாது. மக்களுக்கு நல்லது செய்வதை தடுக்க நினைப்பவர் எந்த முறையில் வந்தாலும்., அவர்களை வேரறுப்போம். திமுகவில் எத்தனை அமைச்சரவை மாற்றினாலும் இந்த ஆட்சி நீடிக்கப் போவதில்லை. எல்லாத்துறையிலும் சர்வ சாதாரணமாக வசூல் நடைபெற்றுக் கொண்டே தான் இருக்கிறது. கலெக்ஷன்,கரப்ஷன், வசூல் என நடந்து கொண்டு இருக்கிறது. 2026-ல் இந்த தமிழக மக்களுக்கு சாப விமோசனத்தை எடப்பாடியார் கொடுப்பார்.

ஒவ்வொரு இந்தியரும் பிரதமருக்கும் மத்திய அமைச்சர்களுக்கும் நன்றி தெரிவிக்க வேண்டும். ராணுவ வீரரின் நடவடிக்கையை 2 நாட்களாக தூங்காமல் கண் வழித்து ராணுவ வீரர்களின் நடவடிக்கைகளை உன்னிப்பாக வீடியோ மூலமாக கவனித்து வருகிறார். இப்படி ஒரு பிரதமரை பெற்றதற்கு இந்திய மக்கள் உண்மையில் பெருமைப்பட வேண்டும்.

இன்றைக்கு திமுக சார்பில் ராணுவ வீரருக்கு பாராட்டு தெரிவிக்க ஊர்வலம் நடத்துவது நாடகம். ராணுவத்திற்கு தேவையான தொழில்நுட்பங்களையும்., தேவையான கருவிகளை கேட்டு வாங்கியது பாதுகாப்புதுறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் உள்துறை அமைச்சர்கள் தான். அதனை ராணுவத்திற்கு வாங்கி கொடுத்தது மத்திய அரசு. இவ்வாறு அவர் பேசினார்.

# நீட் தேர்வில் தேர்ச்சி பெறுவது எப்படி..? அ.தி.மு.க. எம்.பி. தம்பிதுரை விளக்கம்

**கிருஷ்ணகிரி, மே 11-**

சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்கு இணையாக மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் பாடத்திட்டத்தை தரமாக அரசு உயர்த்தினால் தமிழக மாணவர்கள் எளிதாக நீட் தேர்வுகளில் தேர்ச்சி பெற முடியும், என பர்கூரில் அ.தி.மு.க. எம்.பி தம்பிதுரை கூறியுள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூரில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற அ.தி.மு.க. கொள்கை பரப்புச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான மு.தம்பிதுரை செய்தியாளர்களிடம் கூறியதாவது: அ.தி.மு.க. கொள்கை ரீதியாக நீட் தேர்வு வேண்டாம் என்றாலும், மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மெட்ரிகுலேஷன் மற்றும் அரசு பள்ளிகளை தரம் உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைக்கிறோம். இதனை தவிர்த்து சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்கு மாநில அரசு அனுமதி வழங்குவதால், அது மத்திய அரசின் கல்விக் கொள்கையின் கீழ் தான் வரும். கடந்த 4 ஆண்டு திமுக ஆட்சியில் 252 சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது. சி.பி.எஸ்.இ. பள்ளிக்கு அனுமதி வழங்கிவிட்டு, மாநில கல்வி மத்திய அரசுக்கு சென்று விட்டது என குறை சொல்வது சரியாக இருக்காது.

சி.பி.எஸ்.இ. கல்வியை விட மெட்ரிகுலேஷன் கல்வி தரத்தை மாநில அரசு உயர்த்த வேண்டும்.

சி.பி.எஸ்.இ. பள்ளிக்கு இணையாக மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் பாடத்திட்டத்தை தரமாக அரசு உயர்த்தினால் தமிழக மாணவர்கள் எளிதாக நீட் தேர்வுகளில் தேர்ச்சி பெற முடியும், என்று அவர் கூறினார். இந்நிகழ்வின் போது, முன்னாள் எம்எல்ஏ ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# கடலூரில் வரும் 15-ம் தேதி கண்டன அ.தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம்

## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு



**சென்னை, மே 11-**

அடிப்படை தேவைகளை நிறைவேற்ற தவறிய தி.மு.க. அரசை கண்டித்து வருகிற 15-ம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;

முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான, கடந்த நான்கு ஆண்டுகால தி.மு.க. ஆட்சியில், தமிழ்நாட்டு மக்கள் பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்களின் அடிப்படை மற்றும் அத்தியாவசியத் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றித் தராமல், திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருவதாக தம்பட்டம் அடித்துக் கொண்டு மக்களை ஏமாற்றி வருகிறது தி.மு.க. அரசு.

அந்த வகையில், கடலூர் மாவட்டம், சிதம்பரம் பகுதி வாழ் மக்களின் அடிப்படை மற்றும் அத்தியாவசியத் தேவைகள் நிறைவேற்றப்படாத காரணத்தால், அப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்துடன் வாழ்ந்து வருவதாக, தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. மக்களின் அத்தியாவசிய, அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் சிறிதும் அக்கறை இல்லாமல், குடும்ப நலன் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் விடியா தி.மு.க.-வின் ஸ்டாலின் மாடல் அரசுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிலையில், கடலூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை; சிதம்பரம் அரசினர் காமராஜர் பொது மருத்துவமனை மற்றும் சிதம்பரம் நகராட்சி ஆகியவற்றில் நிலவி வரும் நிர்வாக சீர்கேடுகளைக் கண்டித்தும்; மக்கள் நலனைக் கருத்தில்கொண்டு அத்தியாவசியத் தேவைகளை உடனடியாக நிறைவேற்றிட வலியுறுத்தியும், அ.தி.மு.க. கடலூர் கிழக்கு மாவட்டத்தின் சார்பில், 15.5.2025 – வியாழக்கிழமை காலை 10 மணியளவில், சிதம்பரம் நகரம், காந்தி சிலை அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியா நடத்திய பதில் தாக்குதலில் 5 ‘முக்கிய’ பயங்கரவாதிகள் பலி

**புதுடெல்லி, மே 11-**

கடந்த 7ம் தேதி 9 பயங்கரவாத முகாம்களை குறிவைத்து இந்தியா நடத்திய தாக்குதலில் ஜெய்ஷ்-இ-முகமது, லஷ்கர் இ தொய்பா அமைப்புகளின் முக்கிய பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் அருகே கடந்த ஏப்ரல் 22-ம் தேதி பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 26 சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடி கொடுக்கும் நோக்கில் இந்திய ஆயுதப்படைகள், கடந்த 7-ம் தேதி பாகிஸ்தானில் உள்ள 9 பயங்கரவாத முகாம்களை குறிவைத்து தாக்குதல் நடத்தின.

இதில், பஹவல்பூரில் இயங்கி வந்த ஜெய்ஷ்-இ-முகமது அமைப்பின் மையம், முரிட்கே பகுதியில் இயங்கி வந்த லஷ்கர்-இ-தொய்பாவின் தளம் ஆகியவையும் அடங்கும். லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-மொஹமது ஆகியவற்றின் முக்கிய நபர்களை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், குறைந்தது 100 பயங்கரவாதிகள் உயிரிழந்திருப்பார்கள் என பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், கொல்லப்பட்டவர்களில் 5 பேர் முக்கிய பயங்கரவாதிகள் என இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று (மே 10) உறுதிப்படுத்தியுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் முடாசர் காதியன் என்பவரும் ஒருவர். மேலும் மசூத் அசாரின் இரண்டு மைத்துனர்களும் கொல்லப்பட்டனர். இவர்களில் ஒருவர் ஹபீஸ் முகமது ஜமீல். இவர், அந்த அமைப்பின் பிரச்சார நடவடிக்கைகளை நிர்வகித்து வந்துள்ளார். மற்றொருவர், 1999 ஐசி-814 விமானக் கடத்தலுக்காக தேடப்படும் முகமது யூசுப் அசார். இந்த தாக்குதலில் கொல்லப்பட்ட 4-வது முக்கிய நபர், லஷ்கர் இ தொய்பா தளபதி காலித். ஐந்தாவது நபர், ஜெய்ஷ்-இ-முகமது அமைப்பைச் சேர்ந்த முகமது ஹசன் கான் என்பது குறிப்பிடத்தக்கது.

# அப்பாவிகளை தாக்கிய பாகிஸ்தான்: அமைச்சர் ஜெய்சங்கர் குற்றச்சாட்டு

**புதுடெல்லி, மே 11-**

பாகிஸ்தான் அப்பாவிகளை தாக்கி வருகிறது என வெளியுறவுத்துறை மந்திரி ஜெய் சங்கர் தெரிவித்துள்ளார்.

பஹல்காமில் பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலுக்கு பதிலடியாக இந்தியா ஆபரேஷன் சிந்தூர் என்ற தாக்குதலை நடத்தியது. இதையடுத்து பாகிஸ்தான் ராணுவம் அத்துமீறி, இந்திய குடியிருப்பு பகுதிகளில் தாக்குதலை நடத்தியது. இந்தியாவின் 15 நகரங்களை குறிவைத்து நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் காஷ்மீரில் பொதுமக்கள் 16 பேர் பலியானார்கள். பாகிஸ்தானின் இந்த அத்துமீறலுக்கு இந்தியா பதிலடி கொடுத்தது.

போர் நிறுத்தம் அமலாவதற்கு முன் பாகிஸ்தான் அப்பாவிகளை தாக்கி வருகிறது என வெளியுறவுத்துறை மந்திரி ஜெய் சங்கர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது: பாகிஸ்தான் ராணுவம் அப்பாவிகளை தாக்கி வருகிறது. பாகிஸ்தானின் ராணுவ நிலைகளை மட்டுமே இந்தியா தாக்கி வருகிறது; பாகிஸ்தானின் அத்துமீறலுக்கு இந்தியா தகுந்த பதிலடி தரும். இந்தியா வரம்பை மீறாது. நிதானமான, பொறுமையான அணுகுமுறைகளை இந்தியா கையாள்கிறது. என தெரிவித்துள்ளார் .

# தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண நிதி

## காஷ்மீர் அரசு அறிவிப்பு

**ஸ்ரீநகர், மே 11-**

ஜம்மு-காஷ்மீரில் எல்லை தாண்டிய தாக்குதலில் உயிரிழந்த பொதுமக்களின் குடும்பங்களுக்கு மாநில அரசு நிவாரணம் அறிவித்துள்ளது. பஹல்காமில் பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலுக்கு பதிலடியாக இந்தியா ஆபரேஷன் சிந்தூர் என்ற தாக்குதலை நடத்தியது. இதையடுத்து பாகிஸ்தான் ராணுவம் அத்துமீறி, இந்திய குடியிருப்பு பகுதிகளில் தாக்குதலை நடத்தியது.


இந்தியாவின் 15 நகரங்களை குறிவைத்து நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் காஷ்மீரில் பொதுமக்கள் 16 பேர் பலியானார்கள். பாகிஸ்தானின் இந்த அத்துமீறலுக்கு இந்தியா பதிலடி கொடுத்து வருகிறது. இந்த நிலையில், ஜம்மு-காஷ்மீரில் எல்லை தாண்டிய தாக்குதலில் உயிரிழந்த பொதுமக்களின் குடும்பங்களுக்கு மாநில அரசு நிவாரணம் அறிவித்துள்ளது. உயிரிழந்த பொதுமக்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.10 லட்சத்தை மாநில அரசு அறிவித்தது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....




இந்தியா ஒரு நிலையான சக்தி. பாகிஸ்தானிடம் உள்ள எதையும் அது விரும்பவில்லை. இந்தியா தனது பொருளாதாரத்தை வளர்ப்பதிலும், தனது உயர் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதிலும், தனது இளைஞர்களுக்கு எதிர்காலத்தை வழங்குவதிலும் மட்டுமே அது கவனம் செலுத்துகிறது.

- சசி தரூர்




பஹல்காம் தாக்குதலை நடத்தியவர்களை பயங்கரவாதிகள் என்று குறிப்பிடாதது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. இந்த விவகாரத்தில் கிளர்ச்சியாளர்கள், துப்பாக்கி ஏந்தியவர்கள் என்பது போன்ற வார்த்தைகளை எப்படிப் பயன்படுத்த முடியும்? மதத்தின் பெயரால் அவர்கள் கொலை செய்கிறார்கள், அவர்கள் பயங்கரவாதிகள்தான்.

- ஒவைசி



இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையேயான போர் நிறுத்தத்தை அமெரிக்கா அறிவித்து இருப்பது வரலாற்றில் இதுவரை இல்லாத ஒன்று. பிரதமர் மோடி அனைத்துக் கட்சி கூட்டத்தை உடனடியாக கூட்டி நாட்டின் பாதுகாப்பு குறித்த விவகாரத்தில் அனைத்து கட்சிகளின் கருத்துகளையும் கேட்க வேண்டும்.

-ஜெய்ராம் ரமேஷ்



இந்தியாவில் இருக்கும் பா.ஜ.க. எதிர்ப்பாளர்கள், பா.ஜ.க.வையும், பிரதமர் மோடியையும் எதிர்ப்பதாக நினைத்துக் கொண்டு, இந்தியாவையும், இந்திய ராணுவத்தையும் அவமதித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்திய ராணுவத்திற்கு எதிராக நாட்டை அவமதிக்கும் வகையில் யார் பேசினாலும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- வானதி சீனிவாசன்

### வரும் 2030-க்குள் 50 ஆயிரம் மெகாவாட்

# சூரிய சக்தி மின் உற்பத்தி செய்ய தமிழ்நாடு மின்வாரியம் இலக்கு

**சென்னை, மே 11-**

வரும் 2030-ம் ஆண்டுக்குள் சூரியசக்தி மின்னுற்பத்தி 50 ஆயிரம் மெகாவாட் அளவை எட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது'' என மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து மின்வாரிய அதிகாரிகள் கூறுகையில், ''சுற்றுச்சூழலைப் பாதிக்காத காற்றாலை, சூரியசக்தி ஆகியவற்றை உள்ளடக்கிய பசுமை எரிசக்தியை பயன்படுத்துமாறு மாநில அரசுகளை, மத்திய அரசு அறிவுறுத்தி வருகிறது. இதன்படி, சூரியசக்தி மின்னுற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழகத்தில் தற்போது சூரியசக்தி மின்னுற்பத்தி நிறுவுதிறன் 10 ஆயிரம் மெகாவாட்டாக உள்ளது.

காற்றாலை மின்னுற்பத்தி செய்வதற்கு, காற்றாலை சீசன் ஒருசில மாதங்கள் மட்டுமே நிலவுவதால், அதை விட சூரிய சக்தி மின்னுற்பத்தி ஓராண்டில் அதிகளவு மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன், சூரியசக்தி மின்னுற்பத்திக்கான செலவு குறைவாக இருப்பதோடு, சுற்றுச்சூலை பாதிக்காத வகையிலும் உள்ளது. எனவே, சூரியசக்தி மின்னுற்பத்தியை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, வரும் 2030-ம் ஆண்டுக்குள் 50 ஆயிரம் மெகாவாட் சூரியசக்தி மின்னுற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது என்று தெரிவித்தனர்.

# இந்திய எல்லையை நோக்கி படையை நகர்த்திய பாக். ராணுவம்: வியோமிகா



**புதுடெல்லி, மே 11-**

இந்திய எல்லையை நோக்கி பாகிஸ்தான் தனது துருப்புகளை நகர்த்துவதாக விங் கமாண்டர் வியோமிகா சிங் தெரிவித்துள்ளார்.

இந்தியா-பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. முன்னதாக பதற்றம் அதிகரித்த நிலையில், அது தொடர்பான செய்தியாளர் சந்திப்பு புதுடெல்லியில் நேற்று (மே 10) நடைபெற்றது. இதில், வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, கர்னல் சோபியா குரேஷி, விங் கமாண்டர் வியோமிகா சிங் ஆகியோர் பங்கேற்றனர்.

விமானப் படையின் பதில் நடவடிக்கைகள் தொடர்பாக பேசிய விங் கமாண்டர் வியோமிகா சிங், ''பாகிஸ்தான் ராணுவம் இந்திய எல்லையை நோக்கி தனது துருப்புக்களை நகர்த்தி வருகிறது. இது பதற்றத்தை மேலும் அதிகரிக்கும் நோக்கம் கொண்ட தாக்குதலை குறிக்கிறது. இந்திய ஆயுதப் படைகள் உச்சபட்ச தயார் நிலையில் உள்ளன. அனைத்து விரோத நடவடிக்கைகளும் திறம்பட எதிர்கொள்ளப்பட்டு, விகிதாச்சார ரீதியாக பதிலளிக்கப் பட்டுள்ளன.

பாகிஸ்தான் தரப்புக்கு பதிலடி கொடுக்கும் அதே நேரத்தில், பதற்றத்தைத் தவிர்ப்பதற்கான தங்கள் உறுதிப்பாட்டை இந்திய ஆயுதப்படைகள் மீண்டும் வலியுறுத்தின. பாகிஸ்தான் தொடர்ந்து தீங்கிழைக்கும் தவறான தகவல் பிரச்சாரத்தை செயல்படுத்த முயற்சித்துள்ளது. இந்தியாவின் S-400 அமைப்பை அழித்ததாகவும், சூரத்கர் மற்றும் சிர்சாவில் உள்ள விமான நிலையங்களை அழித்ததாகவும் அது கூறுகிறது. பாகிஸ்தானால் பரப்பப்படும் இந்த தவறான கூற்றுக்களை இந்தியா சந்தேகத்துக்கு இடமின்றி நிராகரிக்கிறது என தெரிவித்தார்.

இதற்கிடையில், நேற்று அதிகாலையில் பாகிஸ்தானில் உள்ள நான்கு விமானப்படை தளங்கள் இந்தியத் தாக்குதல்களால் தாக்கப்பட்டதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கட்டுப்பாட்டுக் கோட்டில் பல இடங்களில் இடைவிடாத துப்பாக்கிச் சூடு இன்னும் நடந்து வருகிறது.

# பாக். தாக்குதலில் அரசு அதிகாரி பலி

## முதல்வர் ஒமர் அப்துல்லா இரங்கல்



**ஸ்ரீநகர், மே 11-**

ஜம்மு-காஷ்மீரின் ரஜௌரி பகுதியில் பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில் மாவட்ட வளர்ச்சித் துறை கூடுதல் ஆணையர் பலியானதாக தகவல் வெளியாகியுள்ளது.

பயங்கரவாதிகளுக்கு எதிரான 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையைத் தொடர்ந்து இந்திய ராணுவ நிலைகளைக் குறிவைத்து ட்ரோன்கள், ஏவுகணைகள் மூலம் பாகிஸ்தான் நடத்திவரும் தாக்குதலை முறியடித்து இந்தியா பதில் தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு இந்தியா பதிலடி கொடுத்து வருவதோடு, பாகிஸ்தானுடனான எல்லைப் பகுதிகளில் கண்காணிப்பையும், பாதுகாப்பையும் பலப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், வெள்ளிக்கிழமை நடைபெற்ற அரசின் ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட வளர்ச்சித் துறை கூடுதல் ஆணையர் எஸ்.ராஜ்குமார் தப்பா பங்கேற்ற நிலையில், ரஜௌரியில் பாகிஸ்தான் அத்துமீறி சனிக்கிழமை அதிகாலை நடத்திய தாக்குதலில் அவர் பலியானதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த சம்பவத்துக்கு இரங்கல் தெரிவித்துள்ள அம்மாநில முதல்வர் ஒமர் அப்துல்லா, ஜம்மு-காஷ்மீர் நிர்வாக பணிகளில் பொறுப்புமிக்க ஒரு அரசு அதிகாரியை நாங்கள் இழந்துவிட்டோம். நேற்று மாவட்டம் முழுவதும் துணை முதல்வருடன் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டிருந்தார். மேலும், எனது தலைமையில் நடைபெற்ற ஆன்லைன் ஆலோசனைக் கூட்டத்திலும் பங்கேற்றார். இந்தநிலையில் ரஜௌரி நகரத்தை குறிவைத்து பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில் அதிகாரி ராஜ் குமார் தாப்பா வீடு தாக்கப்பட்டதில் கொல்லப்பட்டுள்ளார். அவரது உயிரிழப்பால் தனக்கு ஏற்பட்டுள்ள அதிர்ச்சியையும் சோகத்தையும் வெளிப்படுத்த வார்த்தைகள் இல்லை. அவரது ஆன்மா சாந்தியடையட்டும் என கூறியுள்ளார்.

# பொய் பிரச்சாரங்களில் ஈடுபடும் பாகிஸ்தான்: வெளியுறவு செயலாளர் மிஸ்ரி குற்றச்சாட்டு

**புதுடெல்லி, மே 11-**

ஆத்திரமூட்டும் தீவிர தாக்குதல்களில் பாகிஸ்தான் ஈடுபட்டதாக வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி குற்றம் சாட்டியுள்ளார். மேலும் பாகிஸ்தான் தொடர் பொய் பிரச்சாரங்களை மேற்கொள்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியா-பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. முன்னதாக இந்தியா -பாகிஸ்தான் இடையே பதற்றம் அதிகரித்திருந்த நிலையில், அது தொடர்பான செய்தியாளர் சந்திப்பு புதுடெல்லியில் நேற்று (மே 10) நடைபெற்றது. இதில், வழக்கம்போல் வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, கர்னல் சோபியா குரேஷி, விங் கமாண்டர் வியோமிகா சிங் ஆகியோர் பங்கேற்றனர்.

வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி கூறுகையில், ''பாகிஸ்தானின் நடவடிக்கைகள் ஆத்திரமூட்டக் கூடியதாகவும், பதற்றத்தைத் தீவிரப்படுத்தக் கூடியதாகவும் இருப்பதை இதற்கு முன்பு பல சந்தர்ப்பங்களில் நான் சுட்டிக்காட்டி உள்ளேன். இதற்கு இந்தியா பொறுப்புடனும், அளவிடப்பட்ட முறையிலும் பாதுகாப்புக்கான எதிர்வினையை ஆற்றி உள்ளது.

நேற்று காலையும் ஆத்திரமூட்டக்கூடிய, தீவிரமான தாக்குதல்களை பாகிஸ்தான் நடத்தியது. பாகிஸ்தானின் செயல் ஆத்திரமூட்டலையும், தீவிரத்தையும் ஏற்படுத்தியது. பாகிஸ்தானின் இந்த நடவடிக்கைகளுக்கு இந்தியா அளவான முறையில் பதிலளித்தது.

குடிமக்கள் தங்கள் சொந்த அரசாங்கத்தை விமர்சிப்பதைப் பார்ப்பது பாகிஸ்தானியர்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஏனெனில், அவ்வாறு விமர்சிப்பது வெளிப்படைத்தன்மை நிறைந்த செயல்படக்கூடிய ஜனநாயகத்தின் ஓர் அடையாளமாகும். பாகிஸ்தானுக்கு இதில் பரிச்சயம் இல்லாதது எங்களுக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை. நேற்று (சனிக்கிழமை) காலை ஜம்மு காஷ்மீரில் உள்ள ரஜோரி நகரத்தின் மீது பாகிஸ்தான் ஷெல் தாக்குதல் நடத்தியது.

இந்தியாவைப் பிளவுபடுத்தும் இந்த தவறான முயற்சிகள் தோல்வியடையும். பாகிஸ்தான் இந்திய தளங்களை குறிவைப்பது குறித்து தொடர்ந்து பொய்களையும் தவறான தகவல்களையும் பரப்பி வருகிறது.

இந்தியாவின் முக்கியமான உள்கட்டமைப்பு, மின் அமைப்புகள், சைபர் அமைப்புகள் போன்றவற்றின் பெரும் பகுதிகள் தாக்கப்பட்டு அழிக்கப்படுவதாகக் கூறப்படும் கூற்றுக்கள் முற்றிலும் தவறானவை.

பாகிஸ்தான் அரசால் பரப்பப்படும் பொய் மூட்டையால் மக்கள் தவறாக வழிநடத்தப்பட வேண்டாம்'' எனத் தெரிவித்தார்.

### இந்திய ராணுவ தாக்குதலில்

# பாக். ராணுவ, ரேடார் தளங்கள், ஆயுதக்கிடங்குகளுக்கு சேதம்

## கர்னல் சோபியா குரேஷி தகவல்



**புதுடெல்லி, மே 11-**

பாகிஸ்தான் ஆயுதப் படைகளுக்கு பதிலளிக்கும் விதமாக அந்நாட்டின் ராணுவ தளங்கள், ரேடார் தளங்கள், ஆயுதக் கிடங்குகளை இந்திய ராணுவம் தாக்கியதாகவும், இதன்மூலம், குறைந்தபட்ச இழப்புகளை உறுதி செய்ததாகவும் கர்னல் சோபியா குரேஷி தெரிவித்துள்ளார்.

இந்தியா-பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம் அமலாகியுள்ளது. முன்னதாக பதற்றம் அதிகரித்த நிலையில், அது தொடர்பான செய்தியாளர் சந்திப்பு புதுடெல்லியில் நேற்று (மே 10) நடைபெற்றது. இதில், வழக்கம் போல் வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, கர்னல் சோபியா குரேஷி, விங் கமாண்டர் வியோமிகா சிங் ஆகியோர் பங்கேற்றனர். விக்ரம் மிஸ்ரியைத் தொடர்ந்து பேசிய கர்னல் சோபியா குரேஷி, ''பாகிஸ்தான் ராணுவம் எல்லையோரப் பகுதிகளில் கண்டிக்கத்தக்க மற்றும் தொழில்முறையற்ற தாக்குதல்களை நடத்தியது. ஸ்ரீநகர், அவந்திபூர் மற்றும் உதம்பூர் விமான தளங்களில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் பள்ளி வளாகங்களை பாகிஸ்தான் குறிவைத்தது. இது மீண்டும் ஒருமுறை அவர்களின் பொறுப்பற்ற போக்கை வெளிப்படுத்தியது. பஞ்சாபில் பாகிஸ்தான் அதிவேக ஏவுகணையை ஏவியது.

பாகிஸ்தான் வேண்டுமென்றே விமானப்படை தளங்களை குறிவைத்தது. இதற்கு பதில் அளிக்கும் விதமாக, இந்திய ஆயுதப்படைகள் விரைவான மற்றும் நன்கு திட்டமிடப்பட்ட பதில் நடவடிக்கையை எடுத்து பாகிஸ்தானின் தொழில்நுட்ப நிறுவனங்கள், கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்கள், ரேடார் தளங்கள் மற்றும் ஆயுதக் கிடங்குகளை குறிவைத்தன.

ரபிகி, முரித், சக்லாலா, ரஹீம் யார் கான், சுக்கூர் மற்றும் சுனியன் ஆகிய இடங்களில் உள்ள பாகிஸ்தான் ராணுவ தளங்கள் வான்வழி ஏவுதல், துல்லிய வெடிமருந்துகள் மற்றும் போர் விமானங்கள் மூலம் குறிவைக்கப்பட்டன. பஸ்ரூரில் உள்ள ரேடார் தளம் மற்றும் சியால்கோட்டில் உள்ள விமான தளமும் துல்லியமான வெடிமருந்துகளால் குறிவைக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளின் மூலம் இந்தியா குறைந்தபட்ச இணை சேதம் மற்றும் இழப்புகளை உறுதி செய்தது.

மேற்கு பகுதியில், பாகிஸ்தானின் ஆக்ரோஷமான நிலைப்பாடு தொடர்ந்தது. அது இந்திய ராணுவத்தை குறிவைக்க முயன்றது. ஸ்ரீநகரிலிருந்து சாலியா வரை 26 இடங்களில் பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்தியது. உதம்பூர், ஆதம்பூர், பதான்கோட் மற்றும் பதிண்டாவில் உள்ள விமானப்படை தளங்களில் சேதம் ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீநகர், அவந்திபூர் மற்றும் உதம்பூரில் உள்ள ராணுவ மருத்துவமனைகளை பாகிஸ்தான் குறிவைத்தது. பாகிஸ்தான் ராணுவம் எல்லைப் பகுதிகளுக்கு தங்கள் படைகளை நகர்த்துவதை இந்திய ராணுவம் கண்டறிந்தது. மேற்கு முன்னணியில் உள்ள இந்தியாவின் ராணுவ தளங்களைத் தாக்க பாகிஸ்தான் ட்ரோன்கள், நீண்ட தூர ஆயுதங்கள், சுழன்று தாக்கும் வெடிமருந்துகள், ஜெட் விமானங்களைப் பயன்படுத்தியது.'' என தெரிவித்தார்.

### இந்தியா முழுவதும் மே 14 வரை

# 32 விமான நிலையங்களில் விமான சேவை நிறுத்தம்

**புதுடெல்லி, மே 11-**

இந்தியாவில் உள்ள 32 விமான நிலையங்களில் உள்நாட்டு விமான சேவைகள் மே 14 வரை நிறுத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆதம்பூர், அம்பாலா, அமிர்தசரஸ், அவந்திபூர், பதிண்டா, பூஜ், பிகானேர், சண்டிகர், ஹல்வாரா, ஹிண்டன், ஜெய்சல்மேர், ஜம்மு, ஜாம்நகர், ஜோத்பூர், காண்ட்லா, காங்க்ரா (ககல்), கேஷோத், கிஷன்கர், குலு மணாலி (பூந்தர்), லெஹ், லூதியானா, லே, லூதியானா, பத்ரா, லூதியானா, போர்பந்தர், ராஜ்கோட் (ஹிராசர்), சர்சாவா, சிம்லா, ஸ்ரீநகர், தோயிஸ் மற்றும் உத்தரலை உள்ளிட்ட விமான நிலையங்களில் உள்நாட்டு விமான சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது என மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. கூடுதலாக, டெல்லி மற்றும் மும்பை விமான தகவல் பகுதிகளில் இயங்கும் வழித்தடங்கள் மே 15 அன்று காலை 5:29 மணி வரை மூடப்படுகிறது. இதற்கிடையே போர் நிறுத்தம் அமலாகியுள்ளது. முன்னதாக பகுதிகளில் எல்லை தாண்டிய பதற்றம் அதிகரித்த நிலையில், இந்த உத்தரவு வெளியானது.

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்களை குறிவைத்து இந்தியா அண்மையில் நடத்திய துல்லிய தாக்குதலைத் தொடர்ந்து, ஜம்மு, பஞ்சாப் மற்றும் ராஜஸ்தானில் உள்ள பகுதிகளை குறிவைத்து பாகிஸ்தான் ராணுவம் ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்லை நடத்தி வருகிறது. இந்திய பாதுகாப்பு அமைப்புகள் அவற்றை வெற்றிகரமாக இடைமறித்து வீழ்த்திய போதிலும், தொடர்ந்து எல்லை பகுதிகளில் பதற்றம் நீடித்தவண்ணம் உள்ளது. முன்னதாக பாதிப்புக்குள்ளான பகுதிகளில் சேவைகள் ரத்து செய்யப்படுவதாக ஏர் இந்தியா, இண்டிகோ உள்ளிட்ட நிறுவனங்கள் ஏற்கெனவே அறிவித்திருந்தன.

ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான்,குஜராத் ஆகிய 4 எல்லை மாநிலங்களில் வியாழக்கிழமை இரவு 36 இடங்களை குறிவைத்து பாகிஸ்தான் ஏவிய 400-க்கும் மேற்பட்ட துருக்கி தயாரிப்பு ட்ரோன்களை 'சுதர்சன சக்கரம்' (எஸ்-400) உள்ளிட்ட வான் பாதுகாப்பு ஆயுதங்களால் இந்திய ராணுவம் சுட்டு வீழ்த்தியது. அதன் பின்னரும், பாகிஸ்தானின் வான்வழித் தாக்குதல்களும், இந்தியாவின் பதிலடி தாக்குதல்களும் நீடிப்பது கவனிக்கத்தக்கது. காஷ்மீரின் பாரமுல்லா முதல் குஜராத்தின் பூஜ் வரையிலான 26 இடங்களை பாகிஸ்தான் ட்ரோன்கள் குறிவைத்து வெள்ளிக்கிழமை பின்னரவில் தாக்குதல் நடத்தியதாக அதிகாரிகள் தெரிவித்தனர். பாரமுல்லா, ஸ்ரீநகர், அவந்திபோரா, நக்ரோடா, ஜம்மு, பெரோஸ்பூர், பதன்கோட், ஃபாசில்கா, லால்கர் ஜட்டா, ஜெய்சால்மர், பார்மர், புஜ், குவார்பெட் மற்றும் லக்கி நாலா ஆகிய இடங்கள் பாகிஸ்தானின் ஆளில்லா விமானங்களால் குறிவைக்கப்பட்டன.

இவற்றை இந்திய ராணுவம் வெற்றிகரமாக முறியடித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### வாராணசி: தீவிரவாதத்தை ஒழிக்க

# மசூதிகளில் சிறப்பு தொழுகை

**புதுடெல்லி, மே 11-**

தீவிரவாதத்தை ஒழிக்க வாராணசி மசூதிகளில் தொழுகையில் சிறப்பு வேண்டுதல் இடம்பெற்றது. இது, பாகிஸ்தானுக்கான பதிலடியில் நாடு முழுவதிலும் தொடரும் ஒற்றுமையாகக் கருதப்படுகிறது.

ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமில் ஏப்ரல் 22-ல் நடத்தப்பட்ட பயங்கரவாத சம்பவம், நாட்டையே உலுக்கியது. பயங்கரவாதிகள் மதத்தின் அடிப்படையில் அப்பாவி மக்களைத் தேர்ந்தெடுத்து குறிவைத்து தாக்கினர்.

இந்த மனிதாபிமான மற்ற செயலுக்கு எதிராக நாடு முழுவதும் கோபம் நிலவுகிறது. அதே நேரத்தில், பயங்கரவாதத்துக்கு எதிரான ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்துக்கு எடுத்துக்காட்டான நிகழ்வுகளும் பல இடங்களில் நடைபெறுகின்றன.

அதற்கு ஓர் உதாரணச் சம்பவம் உத்தர பிரதேசத்தின் வாராணசியில் நடந்துள்ளது. உத்தர பிரதேசம் வாராணசியில் காசி விஸ்வநாதர் கோயிலை ஒட்டி, கியான்வாபி மசூதி உள்ளது. ஜாமியா மசூதியான அதனுடன் சேர்த்து நகரின் அனைத்து மசூதிகளிலும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தொழுகைக்காக பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதுபோன்ற, வெள்ளிக்கிழமை சிறப்புத் தொழுகைகளில் நாடு அல்லது உலக அளவில் நடைபெறும் சம்பவங்கள் முக்கிய இடம்பெறுவது வழக்கம்.

இந்தவகையில், நேற்றைய சிறப்பு தொழுகையின் இறுதியில் அவர்களது இறைவனிடம் கேட்கப்பட்ட 'துவா' எனும் வேண்டுதலில் இருநாடுகளுக்கும் இடையிலானப் போர் இடம்பெற்றது.

இந்தத் தொழுகையில், பங்கேற்ற ஏராளமான முஸ்லிம்கள் தீவிரவாதத்தை ஒழிக்க வேண்டினர். இத்துடன் பாகிஸ்தானுக்கு எதிரான எல்லைப் போரில் இந்தியாவுக்கு வெற்றி கிடைக்கவும் துவா செய்திருந்தனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில்

# வருவாய் தீர்வாய கணக்கு முடிப்பு கடைசி நாள் நிகழ்ச்சி கலெக்டர்.வ.மோகனச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது



**திருவாரூர்,மே.11**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் (09.05.2025) 21 கிராமங்களுக்கான 1434 ஆம் பசலி ஆண்டு வருவாய் தீர்வாய கணக்கு முடிப்பு கடைசி நாள் நிகழ்ச்சி மாவட்ட கலெக்டர்.வ.மோகனச்சந்திரன், தலைமையில் நடைபெற்றது.

1434-ஆம் பசலி ஆண்டு வருவாய் தீர்வாய கணக்கு முடிப்பு 06.05.2025 தொடங்கி 09.05.2025 வரை அந்தந்த வட்டத்திற்குரிய தேதிகளில் நடைபெற்றது. (09.05.2025), நடைபெற்ற இத்தீர்வாயத்தில் பொதுமக்கள் முதியோர் உதவித்தொகை, வீட்டுமனை பட்டா, பட்டாமாறுதல், பட்டா உட்பரிவு மாற்றம், அடிப்படை வசதிகள் குறித்து 117 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் வழங்கினார்கள்.

மேலும், வட்ட வழங்கல் துறையின் சார்பில் 20 நபர்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டையும், வருவாய்துறையின் சார்பில் 158 நபர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டாவும், 11 பயனாளிகளுக்கு திருமண உதவித்தொகை மொத்தம் ரூ.1 லட்சத்து 2 ஆயிரம் மதிப்பீட்டிலும், இயற்கை மரண மற்றும் ஈமக்கிரியை உதவித்தொகை 10 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.2 லட்சத்து 17 ஆயிரத்து 500 மதிப்பீட்டிலும், 1 பயனாளிக்கு ரூ.1 லட்சம் மதிப்பீட்டில் விபத்து நிவாரணம் மற்றும் ஈமக்கிரியை உதவித்தொகை என மொத்தம் 200 பயனாளிகளுக்கு ரூ.4 லட்சத்து 19 ஆயிரத்து 500 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட கலெக்டர்.வ.மோகனச்சந்திரன், வழங்கினார்கள். இத்தீர்வாயத்தில், வட்டாட்சியர்.ந.கார்த்திக், துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



**பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட் புதுவேட்டக்குடி, ஊராட்சி மன்ற புதிய கட்டிடம் கட்ட போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கலெக்டர் கிரேஸ் பச்சாவ் தலைமையில் ரூ.31.40 லட்சம் மதிப்பிலான பணிக்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.**

பெரம்பலூர் மாவட்டத்தில்

# பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளின் முன்னேற்றம்: மாவட்ட கண்காணிப்பு அலுவலர் எம்.லக்ஷ்மி நேரில் ஆய்வு

**பெரம்பலூர்,மே.11**

பெரம்பலூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளின் முன்னேற்ற நிலை குறித்து குன்னம் வட்டத்திற்குட்பட்ட ஆய்க்குடி, துங்கபுரம், கீழப்பெரம்பலூர் ஆகிய பகுதிகளில் பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் எம்.லக்ஷ்மி, , மாவட்ட கலெக்டர் கிரேஸ் பச்சாவ், முன்னிலையில் (10.05.2025) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டத்தில் நீர்வளத் துறையின் சார்பில் சிறப்பு தூர் வாருதல் பணிகளின் கீழ் ஆய்க்குடி ஏரியில் ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் 1 கி.மீ தொலைவிற்கு வடிகால் வாய்க்கால் தூர்வாரும் பணி, துங்கபுரம் ஊராட்சியில் உள்ள ஆணை வாரி ஓடையில் ரூ.29 லட்சம் மதிப்பீட்டில் 1 கி.மீ தொலைவிற்கு தூர் வாருதல் பணி மற்றும் கீழப்பெரம்பலூர் கிராமத்தில் ரூ.14 லட்சம் மதிப்பீட்டில் 1,000 மீட்டர் நீளம் நரி ஓடையில் தூர்வாரும் பணி நடைபெற்று வருவதை பார்வையிட்ட பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் , வாய்க்கால் முழுவதும் முட்புதர்கள் அகற்றி, பக்க கரைகளை வலுப்படுத்தி, தூர்வாரும் பணிகளை மழைக்காலம் தொடங்கும் முன்பே முடிக்க வேண்டும் எனவும், திட்ட மதிப்பீட்டில் உள்ளவாறு பணிகளை தரமாக மேற்கொள்ள வேண்டும் எனவும் நீர்வளத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, பெரம்பலூர் மாவட்டத்தில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம், பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் தலைமையில், கலெக்டர் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, வருவாய்த்துறை, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை பொதுப்பணித்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தோட்டக்கலைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, மகளிர் திட்டம், பள்ளிக்கல்வித்துறை, உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட வருவாய் அலுவலர்.மு.வடிவேல் பிரபு, வேளாண்மை இணை இயக்குநர்பாபு, இணைப்பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) பாண்டியன், பெரம்பலூர் கோட்டாட்சியர் (பொ) .வைத்தியநாதன், நீர்வளத்துறை செயற்பொறியாளர். பாண்டியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி).குணசேகரன், உதவி இயக்குநர் ஊராட்சிகள்.செல்வம், உள்ளிட்ட அனைத்துத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பெண் ஆசிரியர்களுக்கான மருத்துவ விடுப்பு நாட்களை அதிகரிக்க வேண்டும்: தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி வலியுறுத்தல்




**திருவாரூர், மே.11**

திருவாரூரில் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டப் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் முருகேசன் தலைமை வகித்தார். மாநில துணைச் செயலாளர் ஜூலியஸ், மாவட்டப் பொருளாளர் சுபாஷ், மாநில செயற்குழு உறுப்பினர்கள் கிருஷ்ணமூர்த்தி, ஐயப்பன், சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தின் நோக்கங்கள் குறித்து மாவட்டச் செயலாளர் ஈவேரா பேசினார். கூட்டத்தில் மாநிலப் பொதுக்குழு உறுப்பினர்கள் பாலசுப்ரமணியன், செல்வமணி, மகளிர் வலையமைப்பு நிர்வாகிகள் பாலதிரிபுரசுந்தரி, ஜெயந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக மாவட்ட துணைத்தலைவர் சத்யநாராயணன் வரவேற்றார், இறுதியில் திருவாரூர் வட்டாரச் செயலாளர் வேதமூர்த்தி நன்றி கூறினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு, பள்ளிகள் திறப்பதற்கு முன்னர் ஆசிரியர்களுக்கு இந்த ஆண்டுக்கான பணி மாறுதல் கலந்தாய்வு நடத்திட வேண்டும். நீதிமன்ற வழக்குகளை விரைந்து முடித்து காலியாக உள்ள தலைமையாசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும். பள்ளிகளில் படிக்கும் ஆதிதிராவிடர் மாணவிகளுக்கான உதவித்தொகையை அதிகரிக்க வேண்டும். வங்கிகள் மூலம் வழங்கப்படும் இத்தொகை பரிவர்த்தனை கட்டணங்களுக்கே தீர்ந்து விடுகிறது. எனவே இத்தொகையினை நேரிடையாக பணமாக வழங்க வேண்டும். பள்ளிகளில் வழங்கப்படும் சீருடை, புத்தகம், குறிப்பேடு உள்ளிட்ட விலையில்லா பொருள்களை பள்ளிகள் திறப்பதற்கு முன்னரே, ஒரே நேரத்தில், அனைத்து பொருட்களையும் தரமான வகையில் வழங்கிட வேண்டும். ஆசிரியர்களின் கூட்டுறவு சிக்கன நாணய சங்கங்களில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை உடனடியாக சரி செய்ய வேண்டும். இந்த கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் செயலாளர்களை மூன்று ஆண்டுக்கு ஒரு முறை பணி மாறுதல் செய்திட வேண்டும்.

அதிகரித்து வரும் குடும்ப சுமை மற்றும் கற்பித்தல் பணிகள் காரணமாக ஏற்படும் நோய்களுக்கான மருத்துவ உதவிகளை மேற்கொள்ளும் வகையில் பெண் ஆசிரியர்களுக்கு மருத்துவ விடுப்பை அதிகரித்து வழங்க வேண்டும். மேலும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும். இடைநிலை ஆசிரியர் ஊதிய முரண்பாடுகளை சமன் செய்ய வேண்டும். இவைகள் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தஞ்சாவூர் ஆயுதப்படை மைதானத்தில்

# அனைத்து பள்ளிகளின் வாகனங்கள் ஆய்வுப்பணி: கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமையில் நடைபெற்றது



**தஞ்சாவூர்,மே.11**

தஞ்சாவூர் ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்ற ஆய்வில் 452 பள்ளி வாகனங்களும், பட்டுக்கோட்டை அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 334 வாகனங்களும், கும்பகோணம் அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் 225 வாகனங்களும் ஆக மொத்தம் 1011 பள்ளி வாகனங்கள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டன.

குறைபாடுகள் உள்ள வாகனங்கள் குறைகளை சரிசெய்து மீண்டும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். பள்ளி வாகனங்கள் தகுதிச் சான்று பெற்ற பின்னர் பொது சாலையில் இயக்கப்பட வேண்டும்.

பள்ளிகள் திறந்த பின் பொதுசாலையில் தணிக்கை செய்யும் பணிகள் நடைபெறும் என வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் தெரிவித்தனர்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர்.இரா.இ ரா ஜா ரா ம்,, மாவட்ட வருவாய் அலுவலர். தெ.தியாகராஜன், வருவாய் கோட்டாட்சியர்.இலக்கியா, மாவட்ட தீயணைப்பு அலுவலர்குமார், வட்டாரப் போக்குவரத்து அலுவலர்.ப.ஜெயசங்கர், முதன்மை கல்வி அலுவலர் இ ரா, அ ண் ணா து ரை, துணை ஆட்சியர் (பயிற்சி)சங்கரநாராயணன், மோட்டார் வாகன ஆய்வாளர்.வெ.ஆனந்த், வட்டாட்சியர்.சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கும்பகோணம் கல்வி மாவட்ட அளவில் ஏ.ஆர்.ஆர். மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி பிளஸ்2 தேர்வில் முதலிடம் பெற்று சாதனை



**கும்பகோணம், மே.11:**

கடந்த 2025 மார்ச் மாதம் நடந்த 12ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு முடிவுகள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது இதில் கும்பகோணம் ஏஆர்ஆர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளான தீபா 591 மதிப்பெண்கள் பெற்று முதல் இடத்திலும், சாருகேஷ் 579 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடத்திலும், கோபிகாஸ்ரீ 575 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடத்திலும் தேர்ச்சி பெற்றுள்ளனர். மொத்தம் 133 மாணாக்கர்களில் 500 மதிப்பெண்களுக்கு மேல் 19 மாணாக்கர்களும், 400 மதிப்பெண்களுக்கு மேல் 55 மாணாக்கர்களும் பெற்று சாதனை படைத்துள்ளார்கள்.

மேலும் கணினி அறிவியல் பாடத்தில் 2 மாணவர்களும், கணிப்பொறி அறிவியல் பயன்பாடு பாடத்தில் ஒரு மாணவரும், தமிழ், ஆங்கிலம், கணிதம், வேதியியல், இயற்பியல், உயிரியல், கணக்கு பதிவியல், வணிகவியல், பொறியியல் ஆகிய அனைத்து பாடங்களிலும் அதிக மாணாக்கர்கள் 90 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்து கும்பகோணம் கல்வி மாவட்ட அளவில் ஏ.ஆர்.ஆர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதலிடம் பிடித்துள்ளது.இதனை முன்னிட்டு பள்ளியின் வளாகத்தில் மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

இந்த விழாவில் சாதனை படைத்த அனைத்து மாணாக்கர்களுக்கும் ஒத்துழைப்பும்,உறுதுணையாகவும் இருந்த அனைத்து இருபால் ஆசிரியர்களையும், ஊக்கம் கொடுத்த பெற்றோர்களையும், பள்ளியின் தாளாளர்.சுகமாலா வைத்தியநாதன், செயலர் வைத்தியநாதன்,கும்பகோணம் மாநகர திமுக செயலாளரும், துணை மேயருமான சு.ப.தமிழழகன், தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சங்கம் (TPSA) செயலாளர் சௌமியநாராயணன், பள்ளியின் கல்வி ஆலோசகர், முதல்வர் ஆகியோர்கள் பாராட்டி கௌரவித்து வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

திருமருகல் அருகே

# திமுக அரசின் 4-ம் ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம்




**நாகப்பட்டினம்,மே.11-**

திருமருகல் ஒன்றியம் மருங்கூர் கடை தெருவில் திருமருகல் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் 4-ஆம் ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கட்சியின் தெற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.டி.எஸ்.சரவணன் தலைமை வகித்தார். ஒன்றிய அவைத்தலைவர் ஜெகபர் அலி முன்னிலை வகித்தார்.முன்னதாக கிளை செயலாளர் ராஜேந்திரன் வரவேற்றார். இக்கூட்டத்தில் வரும் 2026 சட்டமன்ற தேர்தலிலும் திமுக வேட்பாளர்களை வெற்றி பெற செய்து மீண்டும் திமுக ஆட்சி அமைக்க வேண்டும், ஒன்றியத்தில் கட்சியின் கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும், திமுக அரசின் சாதனைகளை பொதுமக்கள் அனைவருக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் நாகை மாவட்டசெயலாளர்என்.கௌதமன், தலைமைக் கழக பேச்சாளர்கள் ஆரூர் ஜோதி, ஆரூர் மணிவண்ணன்,நாகை நாகராஜன் இளம் பேச்சாளர் சுகநிலவன் ஆகியோர் கலந்துகொண்டு 4 - ஆண்டு சாதனைகள் குறித்து பேசினர். இதில் முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆர்.இளஞ்செழியன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் இளம்சுந்தர் மாவட்ட பிரதிநிதி சோமு ஒன்றிய துணைசெயலாளர் துரையரசன் தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அருண்குமார் உள்ளிட்ட கட்சியின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் கிளை செயலாளர் துளசி செல்வேந்திரன் நன்றி கூறினார்.



**மயிலாடுதுறை கூறைநாடு பகுதியில் சாந்தநாயகி சமேத புனுகீஸ்வரர் திருக்கோயில் பிரமோற்சவம் தேரோட்டம் நடைபெற்றது விழாவிற்கான ஏற்பாடுகளை செயல்அலுவலர்ஸசெ.திவாகர், தக்கார் சாந்தநாயகி புனுகீஸ்வரர், ஆகமபிரவினர்டி மகேஸ்வரன்குருக்கள் செய்திருந்தனர்.**









**ஊட்டி ரோஜாபூங்காவில் நேற்று துவங்கிய 20-வது ரோஜா காட்சியில் இரண்டு லட்சம் பல்வேறு வண்ண ரோஜா மலர்களை கொண்டு கடல் வாழ் உயிரினங்களை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் கடல் உயிரினங்கள் பார்வையாளர்களை கவரும் வண்ணம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.**


வருவாய் கோட்டாட்சியர்
அலுவலகம், கும்பகோணம்
த.ப. 139/2025
நாள் : 28.03.2025

பா.மகாலிங்கம்,
த/பெ.பாவாடை,
3, கோவில்பத்து தெரு,
கடிச்சம்பாடி,
கும்பகோணம்.
– மனுதாரர்
– எதிர் –
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர்
கும்பகோணம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தந்தை "பாவாடை" என்பவர் கடந்த 20.04.2003 அன்று மேற்படி முகவரியில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

பா.மகாலிங்கம்,
மனுதாரர்,
கும்பகோணம்.



வருவாய் கோட்டாட்சியர்
அலுவலகம், கும்பகோணம்
த.ப. 101/2025
நாள் : 28.02.2025

A.அருணா,
க/பெ.அருளானந்தம்,
77, பைராகி தோப்பு,
கும்பகோணம்.
– மனுதாரர்
– எதிர் –
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர்
கும்பகோணம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது மகள் "A.அஜிதா" என்பவர் கடந்த 29.12.2008 அன்று மேற்படி முகவரியில் பிறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

A.அருணா,
மனுதாரர்,
கும்பகோணம்



## காவல்துறை அறிவிப்பு

10 வருடங்களாக தலைமறைவாக இருக்கும் குற்றவாளியை இந்த வழக்கில் அரியலூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் – I அவர்கள் தேடப்படும் குற்றவாளியாக அறிவித்துள்ளார்கள்.

தேடப்படும் குற்றவாளியின் விவரம்:
அரியலூர் மாவட்டம், அரியலூர் காவல் நிலைய குற்ற எண். 712/2016 U/s 294/(b), 387, 506 (ii) IPC. CC No.39/2018.

குற்றவாளியின் பெயர் :
ராஜா, 34/2016,
த/பெ.வேலுசாமி,
சிந்தாமணி தெரு, அரியலூர், அரியலூர் மாவட்டம்.

தகவல் தரவேண்டிய முகவரி :
காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம்
அரியலூர் மாவட்டம் 94981 00705
தொலைபேசி எண். 04329- 222106.

காவல்துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகம்
அரியலூர் உட்கோட்டம்: 94981 00706

காவல்துறை ஆய்வாளர் அவர்கள் அரியலூர்
செல்: 99659 88621
காவல்துறை உதவிஆய்வாளர் அவர்கள் அரியலூர்
செல்: 80721 09249.



## தஞ்சாவூர் மாவட்டம்
## அம்மாபேட்டை தேர்வுநிலை பேரூராட்சி

ந.க.எண்.174/2025/அ1 நாள்: 08.05.2025

**குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**(Two Cover System)**

தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபேட்டை பேரூராட்சியில் 2025–2026 ஆம் ஆண்டு பள்ளி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கீழ்கண்ட விபரப்படி பணிகள் செய்வதற்கு பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்கள் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மூடி முத்திரையிடப்பட்டுள்ள இரண்டு உறை முறை ஒப்பந்தப்புள்ளிகள் மே மாதம் 23 ஆம் தேதி வெள்ளிக் கிழமை (23.05.2025) மாலை 3.00 மணி வரை கீழ்காணும் பேரூராட்சியின் ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் மட்டுமே விண்ணப்பிக்கலாம். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மே மாதம் 23 ஆம் தேதி வெள்ளிக் கிழமை (23.05.2025) மாலை 3.30 மணிக்கு அப்போது வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

பேரூராட்சி ஒப்பந்தப்புள்ளி இணையதளம்:– https://www.tenders.tn.gov.in/nicgep/app

2025- 2026 பள்ளி மேம்பாட்டு திட்டம்

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ) லட்சத்தில் | டெபாசிட் தொகை ரூ. | வேலையின் கால அளவு |
|---|---|---|---|---|
| 1. | அம்மாபேட்டை பேரூராட்சி சின்னக் கடைத் தெரு பகுதியில் புதிதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | 16.65 | 16650 | 6 மாதங்கள் |

குறிப்பு : மேலும் விபரங்கள் வேண்டுவோர் வேலை நாட்களில், வேலை நேரத்தில் அம்மாபேட்டை பேரூராட்சி அலுவலகத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

(ஒம்). திருமதி.ஷோபா ரமேஷ்,
பெருந் தலைவர்,
அம்மாபேட்டை தேர்வுநிலை பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.

(ஒம்) திரு.இரா.இராஜா, (மு.கூ.பொ)
செயல் அலுவலர்,
அம்மாபேட்டை தேர்வுநிலை பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்! சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

வெ.ஆ.எண்.64/செ.ம.தொ.அ/2025/தஞ்சாவூர். நாள்: 10.05.2025.


மயிலாடுதுறை ஏ.வி.சி.கல்லூரி வளாகத்தில்

# பள்ளி வாகனங்கள் கூட்டாய்வு சிறப்பு முகாம்: கலெக்டர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் தலைமையில் நடைபெற்றது

மயிலாடுதுறை,மே.11

மயிலாடுதுறை ஏ.வி.சி.கல்லூரி வளாகத்தில் பள்ளி வாகனங்கள் கூட்டாய்வு சிறப்பு முகாம் மாவட்ட கலெக்டர் .ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .கோ.ஸ்டாலின் முன்னிலையில் நடைபெற்றது.இக்முகாமில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது....



தமிழ்நாடு அரசானது தமிழ்நாடு மோட்டார் வாகனம் பள்ளி வாகனங்கள் ஒழுங்குமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் சிறப்பு விதி 2012 ன் படி மாவட்டத்தில் உள்ள பள்ளி வாகனங்கள் அனைத்தும் மாவட்ட அளவிலான குழுவின் முன்பு ஆண்டுக்கு ஒரு முறை ஆய்வுக்கு உட்படுத்திட உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி மாவட்ட பள்ளி வாகனங்கள் கூட்டாய்வு சிறப்பு முகாமில் சோதனை நடத்தப்பட்டது.

இதில் பள்ளி வாகனங்களில் கூண்டு அமைப்பு, ஏறும் மற்றும் இறங்கும் வழி, அதன் கதவுகள், படிக்கட்டுகள், ஓட்டுநர் இருக்கை அறை, வாகனத்தில் உள்ள இருக்கைகள், புத்தக ரேக்குகள், வாகனம் உள்ளிருக்கும் தளப் பகுதி, ஜன்னல்கள் மற்றும் அதில் பொருத்தப்பட்டுள்ள கம்பிகள், அவசரகால வழி, வாகனத்தை சுற்றி ஒட்டப்பட்டுள்ள பிரதிபலிப்பான், முதலுதவி பெட்டி மற்றும் அதில் பராமரிக்கப்படும் மருந்துகள், தீ தடுப்பான்கள், வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள வேகக் கட்டுப்பாட்டு கருவி (50கி.மீமணிக்கு), வாகனத்தில் உள்ளே பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமரா, வாகனத்தின் வெளிப்புறம் முன் மற்றும் பின்புறம் பொருத்தப்பட்டுள்ள கேமராக்களும் அதை கண்காணிக்க ஓட்டுநர் இருக்கையில் பொருத்தப்பட்டுள்ள டிஸ்ப்ளே மானிட்டர், வாகனத்தின் அனுமதி சீட்டு, தகுதி சான்று, காப்பீடு சான்று, ஓட்டுநர் உரிமம், உதவியாளர் மற்றும் புகை சான்று குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பரிசோதனையில் மயிலாடுதுறை மற்றும் சீர்காழி பகுதியில் உள்ள 65 பள்ளிகளில் இருந்து 396 வாகனங்களில் வருகை தந்த 251 வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அதில் குறைகள் கண்டறியப்பட்ட 14 வாகனங்களுக்கு தகுதி சான்று தற்காலிக நீக்கம் செய்யப்பட்டது. அவைகள் ஏழு நாட்களுக்குள் சரி செய்து மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்திய பின்னரே பயன்பாட்டிற்கு பயன்படுத்த வேண்டும். மேலும் அனைத்து பள்ளிகளும் உள்ள அனைத்து பள்ளி வாகனங்களையும் கட்டாயம் ஆய்வுக்கு உட்படுத்திய பின்னரே பொதுச் சாலையில் பள்ளி குழந்தைகளை ஏற்றி பயன்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு ஆய்வுக்கு உட்படுத்தாமல் பள்ளிகளில் பயன்படுத்தும் வாகனங்கள் கண்டறியப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். விபத்து எதிர்பாராமல் நடைபெற கூடியது. ஓட்டுநர்கள் நல்ல தூக்கம், உடல் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். நல்ல உணவு பழக்க வழக்கங்களை வைத்துக்கொள்ள வேண்டும். ஓட்டுநர்கள் விழிப்போடு செயல்பட வேண்டும் என்றார்.

முன்னதாக தீயணைப்பு துறை மூலம் நிலைய அலுவலர் மற்றும் அவரது குழுவினர் திடீரென ஏற்படும் தீ விபத்தை எவ்வாறு தடுத்து கட்டுப்படுத்துவது குறித்து செயல்முறை விளக்கம் செய்து காண்பித்தனர். 108 ஆம்புலன்ஸ் சேவை குறித்தும் அவசர காலங்களில் அவற்றை எவ்வாறு கையாண்டு பயன்படுத்தி விபத்துகளில் இருந்து காப்பாற்றுவது குறித்து செயல்முறை விளக்கம் ஒருங்கிணைப்பாளர் தலைமையிலான குழுவினர் செய்து காட்டினார்.

இம்முகாமில், மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர்(பொ) .உ.அர்ச்சனா, வட்டார போக்குவரத்து அலுவலர் கதிர்வேலு, வட்டார போக்குவரத்து ஆய்வாளர்கள் மயிலாடுதுறை ராம்குமார், சீர்காழி விஸ்வநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மண்வயல் பகுதியில் ரூ.35.78 லட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு திறந்து வைத்தார்

ஊட்டி, மே.11-

நீலகிரி மாவட்டம், கூடலூர் ஊராட்சி ஒன்றியம், ஸ்ரீமதுரை ஊராட்சி, மண்வயல் பகுதியில், சீனிவாசன் சேவைகள் அறக்கட்டளையின் சார்பில் ரூ.35.78 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு 09-05-2025 அன்று குத்துவிளக்கேற்றி, திறந்து வைத்து பார்வையிட்டார். டிவி.எஸ் மோட்டார் நிறுவனத்தின் சமூகப் பிரிவான சீனிவாசன் சேவைகள் அறக்கட்டளை விழிப்புணர்வு, திறன் மேம்பாடு மற்றும் பயிற்சித் திட்டங்கள் மூலம் கிராமப்புற சமுதாய பணிகளை மேம்படுத்துவதில் முனைப்பாக கொண்டுள்ளதாகும். மேலும் கிராமப் புறங்களில் நிலையான வளர்ச்சியை கொண்டு வருவதற்காக உள்ளூர் சமுதாய மக்கள் மற்றும் அரசு நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து பணிபுரிந்து வருகிறது. இந்த அறக்கட்டளையானது பொருளாதார மேம்பாடு சுகாதாரம் தரமான கல்வி உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பராமரிப்பு சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பாதுகாப்பு 2024 - 2025 நிதியாண்டில், ஸ்ரீ மதுரை ஊராட்சி, மண்வயல் பகுதியில், உள்ள ஆரம்ப சுகாதார மையத்தில், புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் இந்த அறக்கட்டளையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



அனைத்து கட்டிடங்களிலும் பிளம்பிங், வண்ணம் தீட்டும் மற்றும் அடித்தளம் பணிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளது. நீர்சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இது போன்ற உள்கட்டமைப்பு மற்றும் சுகாதார சேவைகளை சீனிவாசன் சேவைகள் அறக்கட்டளை மேம்படுத்தும் பணிகள்; மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிகழ்வின்போது, குன்னூர் சார் ஆட்சியர் ஃ கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் (பொ) சங்கீதா, கூடலூர் வட்டாட்சியர் முத்து மாரி, கூடலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சலீம், சுப்ரமணி, மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.


Printed, Published and Owned by S.Manimaran and Printed at
Manimaran Printers
No. 1 Santhanapuram,
Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam,
Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only


# வரத்து அதிகரிப்பு ஈரோடு வ.உ.சி.மார்க்கெட்டில் காய்கறிகள் விலை குறைந்தது

## முருங்கைக்காய் கிலோ ரூ.140- க்கு விற்பனை

ஈரோடு, மே.11-

ஈரோடு வ.உ.சி மார்க்கெட்டில் 700 க்கும் மேற்பட்ட காய்கறி கடைகள் உள்ளன. தாளவாடி, திருப்பூர், ஒட்டன்சத்திரம், பெங்களூர், கேரளா போன்ற பகுதிகளில் இருந்து காய்கறிகள் அதிக அளவில் விற்பனைக்கு கொண்டுவரப்படுகிறது. கடந்த வாரத்தை விட நேற்று காய்கறிகள் அதிகளவில் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இதனால் ஒரு சில காய்கறிகளின் விலை கடந்த வாரத்தை விட இன்று குறைந்து விற்பனையானது. குறிப்பாக கடந்த வாரம் ஒரு கிலோ பீன்ஸ் 140 ரூபாய்க்கு விற்கப்பட்ட நிலையில் நேற்று ஒரு கிலோ ரூ.100-க்கு விற்கப்பட்டது.இதேபோல் கடந்த வாரம் ஒரு கிலோ பீட்ரூட் 100 ரூபாய்க்கு எடுக்கப்பட்ட நிலையில் நேற்று ஒரு கிலோ ரூ.80-க்கு விற்கப்பட்டது. கடந்த வாரம் ஒரு கிலோ உருளைக்கிழங்கு ரூ. 40-க்கு விற்கப்பட்ட நிலையில் இன்றும் ரூ. 40 -க்கு விற்பனையானது. மற்ற அனைத்து காய்கறிகள் குறைந்த நிலையில் விற்பனையான நிலையில் முருங்கைக் காய் மற்றும் வரத்து குறைவால் ஒரு கிலோ ரூ.140 -க்கு உயர்ந்து விற்பனையானது.

இதைப்போல் வ உ சி மார்க்கெட்டில் இன்று விற்கப்பட்ட மற்ற காய்கறிகளின் விலை கிலோவில் வருமாறு:-கத்திரிக்காய் - 50, வெண்டைக்காய் - 25, பீர்க்கங்காய் - 65, புடலங்காய் - 35, முள்ளங்கி - 25, பாவக்காய் - 70, சுரக்காய் - 20, பட்டா வரை - 70,பெல்ட் அவரை - 90, கருப்பு அவரை - 100, கோவக்காய் - 30, பச்சை மிளகாய் - 50, கேரட் - 40, பீட்ரூட் - 80, இஞ்சி - 50, காலிங்ளவர் - 40, முட்டைகோஸ் - 20, தக்காளி - 15, சின்ன வெங்காயம் - 35, பெரிய வெங்காயம் - 30.

# வெள்ளித்திருப்பூர் பகுதியில் முகாமிட்டிருக்கும் ஒற்றை யானையை வனப்பகுதிக்குள் விரட்ட பொதுமக்கள் கோரிக்கை

அந்தியூர், மே.11-

ஈரோடு மாவட்டம் அந்தியூர் அடுத்த பர்கூர் மலைப்பகுதியில் யானைகள் அதிக அளவில் வசித்து வருகின்றன. தற்போது வனப்பகுதியில் வரட்சியான சூழ்நிலை காரணமாகவும், வெயிலின் தாக்கம் காரணமாகவும் உணவு, தண்ணீரை தேடி யானைகள் அடிக்கடி அடர்ந்த வனப் பகுதியை விட்டு வெளியேறி கிராமத்துக்குள் புகுந்து விவசாய விளை நிலங்களை சேதப்படுத்துவதும், பயிர்களை சேதப்படுத்துவதும் தொடர்கதை ஆகி வருகிறது. இந்நிலையில் அந்தியூர், வெள்ளித் திருப்பூர் அருகே மோத்தங்கல் புதூர் வனப்பகுதியை ஒட்டிய விவசாய நிலங்களில் கடந்த 10 நாட்களுக்கும் மேலாக இரவில் ஒற்றை யானை நடமாடி வருகிறது. பயிர்களை தின்றும், மிதித்தும் நாசம் செய்கிறது. இதுகுறித்து அப்பகுதி மக்கள் கூறும்போது,

கடந்த 10 நாட்களுக்கு மேலாக அடர்ந்த வனப்பகுதியை விட்டு வெளியேறும் ஒற்றை யானை எங்களுக்கு கிராமத்துக்குள் புகுந்து தோட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள வாழை எலுமிச்சம் பழம் போன்றவற்றை தின்று சேதப்படுத்தி வருகிறது. இதனால் விவசாயிகள் தூக்கத்தை இழந்தும் நிம்மதியை இழந்தும் தவிக்கின்றனர். எனவே வனத்துறையினர் கிராமத்துக்குள் புகுந்து அட்டகாசம் செய்யும் ஒற்றை யானையை அடர்ந்த வனப்பகுதிக்குள் விரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.


தமிழ்நாடு அரசு
**திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சி, செங்கல்பட்டு மாவட்டம்**

ந.க.எண். 151/ 2025 ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை நாள்: 02.05.2025

1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 43/1998) கீழ் அறிவிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சிக்காகவும், அதன் சார்பாகவும் மூலதனமான்ய நிதி 2025-2026 கீழ், பின்வரும் பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரர்களிடமிருந்து 2025-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 05ஆம் நாள் (05.06.2025) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை www.tntenders.gov.in என்கிற இணையதளத்தில் சமர்ப்பிக்க வேண்டும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை அன்றைய தினமே பிற்பகல் 3.30 மணிக்கு பதிவிறக்கம் செய்யப்பட்டு கூர்ந்தாய்வு அலுவலர்களால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தகுதியான ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமாக இதர நிபந்தனைகள் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த நாள் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) | காப்புத் தொகை ரூ | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| 1. | திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சிக்குட்பட்ட திருப்போரூர் கிராமம் புல எண்.276/1 ல் புதிய அலுவலக கட்டிடம் கட்டுதல் | 98.00 | 98,000/- | 180 தினங்கள் |

செயல் அலுவலர்
திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சி, செங்கல்பட்டு மாவட்டம்.

செ.ம.தொ.இ / 2091 / ஒப்பந்தப்புள்ளி /2025



**மம்சாபுரம் பேரூராட்சி, விருதுநகர் மாவட்டம்**

ந.க.எண். 189/2025 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள். 30.04.2025

(இணையதளம் வாயிலாக மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

மம்சாபுரம் பேரூராட்சியில் TURIP SCHEME ADDITIONAL ALLOCATION (FOR KNMT) 2025-2026 இன் கீழ் **ரூ. 96.00 இலட்சம்** மதிப்பீட்டில் **மம்சாபுரம் பேரூராட்சி வார்டு எண்.06, கர்ணம் தெரு, குறுக்குத் தெரு 1, 2 மற்றும் 3, வார்டு எண்.17, 18 இராஜபாளையம் ரோட்டில் உள்ள குறுக்கு தெரு** ஆகியவற்றில் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணிகள் செய்திட ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை) வரவேற்கப்படுகின்றன.

1. முன்வைப்புத்தொகை ரூ.96,000/– ஆன்லைன் மூலம் மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
3. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள் :
   அ) முன் கலந்தாய்வு கூட்டம் : 14.05.2025 காலை 12.00 மணி
   ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : 20.05.2025 மாலை 3.00 மணி வரை
   இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் : 20.05.2025 மாலை 3.30 மணி
4. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.
5. ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

செயல் அலுவலர்,
மம்சாபுரம் பேரூராட்சி, விருதுநகர் மாவட்டம் – 626 110.

செ.ம.தொ.இ/2051/ஒப்பந்தப்புள்ளி/2025

# டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற கோலி முடிவு..?

## மறுபரிசீலனை செய்ய பி.சி.சி.ஐ. கோரிக்கை

**மும்பை, மே 11-**

ரோகித் சர்மாவை தொடர்ந்து டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற விராட் கோலி முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. கோலியின் முடிவை மறு பரிசீலனை செய்ய பி.சி.சி.ஐ. கோரிக்கை விடுத்துள்ளது.



**நட்சத்திர பேட்ஸ்மேன்...**

இந்திய அணியின் நட்சத்திர பேட்ஸ்மேன் விராட் கோலி. முன்னாள் கேப்டனான இவர் டி20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். ஒருநாள் மற்றும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மட்டும் விளையாடி வருகிறார். ஐ.பி.எல். தொடர் முடிவடைந்த பிறகு இந்தியா இங்கிலாந்து சென்று 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட இருக்கிறது. இந்த தொடருக்கான இந்திய அணி விரைவில் அறிவிக்கப்பட இருக்கிறது.

**விமர்சனம்...**

நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக இந்திய அணி டெஸ்ட் தொடரை இழந்தது. இந்த தொடரில் விராட் கோலி சிறப்பாக விளையாடவில்லை. இதனால் அவர் மீது விமர்சனம் எழுந்தது. ரோகித் சர்மா கேப்டனாக நீடிக்க வாய்ப்பில்லை எனத் தகவல் வெளியான நிலையில், ஒரு சில தினங்களுக்கு முன்னதாக டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

**ஓய்வு பெற முடிவு...**

இந்த நிலையில்தான் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற விரும்புவதாக பி.சி.சி.ஐ.க்கு தெரிவித்துள்ளார். முக்கியமான இங்கிலாந்து தொடருக்கு எதிராக விராட் கோலியின் இந்த முடிவு பி.சி.சி.ஐ.க்கு அதிர்ச்சி அளித்துள்ளது. தனது முடிவை திரும்பப் பெறுவது குறித்து பரிசீலனை செய்யும்படி பி.சி.சி.ஐ., விராட் கோலியுடன் கேட்டுக்கொண்டதாக தெரிகிறது.

**முடிவுக்கு வருகிறது...**

ஒருவேளை ஓய்வு முடிவில் விராட் கோலி உறுதியாக இருந்தால் இங்கிலாந்து தொடரில் மட்டும் விளையாடும்படி பி.சி.சி.ஐ. வற்புறுத்தலாம். எப்படி இருந்தாலும் விராட் கோலியின் டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வரவிருக்கிறது.

விராட் கோலி இந்திய அணிக்காக 123 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 9230 ரன்கள் அடித்துள்ளார். இதில் 30 சதம், 31 அரைசதம் அடங்கும். ஆட்டமிழக்காமல் 254 ரன்கள் அடித்தது ஒரு இன்னிங்சில் அதிகபட்ச ஸ்கோர் ஆகும்.

### எஞ்சிய ஐ.பி.எல். போட்டிகளை

# தென்னிந்தியாவில் நடத்த பி.சி.சி.ஐ. திட்டம்?

**சென்னை, மே 11-**

எஞ்சிய ஐ.பி.எல். போட்டிகளை தென்னிந்தியாவில் நடத்த பி.சி.சி.ஐ. திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



**ஒத்திவைப்பு...**

10 அணிகள் இடையிலான 18-வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி மார்ச் 22-ந் தேதி தொடங்கி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வந்தது. இதனிடையே இந்தியா-பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நிலவி வரும் நிலையில் ஐ.பி.எல். தொடர் ஒருவாரம் நிறுத்தி வைக்கப்படுவதாக இந்திய கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது. நடப்பு ஐ.பி.எல். தொடரில் இன்னும் லீக், பிளே ஆப் சுற்று மற்றும் இறுதிப்போட்டி உட்பட 16 ஆட்டங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. இதனால் இந்த ஆட்டங்களை குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே நடத்தி முடிக்க பி.சி.சி.ஐ. திட்டமிட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

**தென்னிந்தியாவில் நடத்த...**

அதன்படி ஐ.பி.எல். தொடரின் எஞ்சிய போட்டிகளை தென்னிந்தியாவில் நடத்த பி.சி.சி.ஐ. முடிவெடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதற்காக சென்னை, பெங்களூரு மற்றும் ஐதராபாத் ஆகிய மைதானங்களை பி.சி.சி.ஐ. தேர்வு செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பாதியில் நிறுத்தப்பட்ட

# பஞ்சாப் - டெல்லி ஐ.பி.எல். போட்டி மீண்டும் நடக்குமா..?

**தர்மசாலா, மே 11-**

பாதியில் நிறுத்தப்பட்ட பஞ்சாப் - டில்லி ஐ.பி.எல். லீக் போட்டி மீண்டும் நடத்தப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.



**போர்ப் பதற்றம்...**

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலை இந்தியா மேற்கொண்டது. இதன் விளைவாக, இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போர்ப் பதற்றம் அதிகரித்து, இரு தரப்பிலிருந்தும் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதனால் ஐ.பி.எல். போட்டிகள் ஒரு வாரத்துக்கு நிறுத்தி வைக்கப்பட்டது.

**பாதியில் நிறுத்தம்...**

ஹிமாசலில் மே.8ஆம் தேதி நடைபெற்ற பஞ்சாப் -டில்லி ஐ.பி.எல். போட்டி பாதியிலேயே நிறுத்தப்பட்டது. பஞ்சாப் அணி 10.1 ஓவர்களில் 122/1 ரன்கள் குவித்திருந்தது. இந்தப் போட்டியில் பிரியான்ஷ் ஆர்யா 70 ரன்களுக்கு ஆட்டமிழக்க பிரப்சிம்ரன் சிங் 50 ரன்களுடனும் ஷ்ரேயாஸ் ஐயர் பூஜ்ஜியத்துடனும் களத்தில் இருந்தார்கள். இந்தப் போட்டி கைவிடப்பட்டாலும் இரு அணிகளுக்கும் தலா 1 புள்ளிகளை ஐ.பி.எல். நிர்வாகம் வழங்கவில்லை. அதனால், இந்தப் போட்டி மீண்டும் தொடங்குமா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

**வாக்குவாதம்...**

இந்நிலையில், இந்தப் போட்டி 10.1ஆவது ஓவரில் இருந்து மீண்டும் தொடங்குமா அல்லது புதியதாக தொடங்குமா எனக் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. சில ஊடகங்களில் 10.1ஆவது ஓவரில் இருந்து மீண்டும் தொடங்குமெனக் கூறப்பட்டு வருகிறது. இது குறித்த அதிகாரபூர்வ தகவல் வெளியாகாத நிலையில் கிரிக்கெட் ரசிகர்களிடையே வாக்குவாதம் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டி இரு அணிகளுக்குமே முக்கியமானது. ஒருவேளை இரு அணிகளுக்கும் தலா 1 புள்ளியை வழங்கினால் டில்லிக்கு சற்று பின்னடைவாக இருக்கலாம்.

# எஞ்சிய போட்டிகளை நடத்தி கொள்ள இங்கி., கிரிக்கெட் வாரியம் அழைப்பு

**புதுடில்லி, மே 11-**

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போர்ப் பதற்றம் காரணமாக ஒரு வாரத்திற்கு ஐ.பி.எல். போட்டிகள் நிறுத்தப்பட்டிருக்கும் நிலையில், எஞ்சிய போட்டிகளை தங்கள் நாட்டில் நடத்திக் கொள்ள இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் அழைப்பு விடுத்துள்ளது.




**ஒத்திவைப்பு...**

2025ஆம் ஆண்டுக்கான 18வது ஐ.பி.எல். போட்டிகள் கடந்த மார்ச் 22ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகின்றன. ஐ.பி.எல். இறுதிப் போட்டி மே 25ஆம் தேதி நடைபெறவிருந்தது. பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் ஏற்பட்டிருக்கும் நிலையில், இந்தியாவில் நடந்து வந்த ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகள் காலவரையறையின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் போர்ப் பதற்றம் இருக்கும்போது கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுவது நல்லதல்ல என பி.சி.சி.ஐ. அதிகாரி கூறியிருந்தார்.

**இங்கிலாந்து அழைப்பு...**

இந்நிலையில் எஞ்சிய போட்டிகளை தங்கள் நாட்டில் நடத்திக் கொள்ள இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் அழைப்பு விடுத்துள்ளது. மீதமுள்ள ஐ.பி.எல். போட்டிகள் வெளிநாட்டில் தொடருமா அல்லது இந்தியாவிலேயே நடைபெறுமா என்று கேள்வி எழுந்திருந்த நிலையில், இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் இந்த அழைப்பை மேற்கொண்டுள்ளது. அழைப்பு ஏற்கப்படுமா? என்பது குறித்து விரைவில் தெரியவரலாம்.

## கிளாசிக் ஈட்டி எறிதல் ஒத்திவைப்பு

ஒலிம்பிக்கில் 2 பதக்கங்கள் (தங்கம் மற்றும் வெள்ளி) வென்று சாதனை படைத்த இந்திய ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ராவுக்கு பெருமை சேர்க்கும் வகையில், 'நீரஜ் சோப்ரா கிளாசிக் ஈட்டி எறிதல் போட்டி' இந்தியாவில் நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது. இந்த போட்டி பெங்களூருவில் உள்ள கண்டீவாரா ஸ்டேடியத்தில் வருகிற 24-ந் தேதி நடக்க இருந்தது.

இந்த ஈட்டி எறிதல் போட்டியில் 2 முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற ஆண்டர்சன் பீட்டர்ஸ் (கிரனடா), 2016-ம் ஆண்டு ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்ற தாமஸ் ரோஹ்லர் (ஜெர்மனி), 2016-ம் ஆண்டு ஒலிம்பிக்கில் வெள்ளி வென்ற ஜூலியஸ் யெகோ (கென்யா), கர்டிஸ் தாம்சன் (அமெரிக்கா) உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்க இருந்தனர். இந்நிலையில் இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் நிலவுவதால் இந்த போட்டி மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

## ரிஷப் பண்ட் குறித்து சஞ்சய் பங்கர்

நடப்பு ஐ.பி.எல். தொடருக்கு முன்னதாக நடைபெற்ற மெகா ஏலத்தில் ரூ.27 கோடி என்ற ஐ.பி.எல். வரலாற்றில் அதிக தொகைக்கு வாங்கப்பட்ட ரிஷப் பண்ட் லக்னோ அணியின் கேப்டனாக நியமிக்கப்பட்டார். ஆனால் அந்த வாய்ப்பில் கேப்டனாக மட்டுமின்றி பேட்ஸ்மேனாகவும் சொதப்பிய பண்ட் 11 போட்டிகளில் விளையாடி வெறும் 128 ரன்கள் மட்டுமே அடித்துள்ளார். இதன் காரணமாக லக்னோ அணி புள்ளி பட்டியலில் 7-வது இடத்தில் தடுமாறி வருகிறது.

இந்நிலையில் ரிஷப் பண்ட் தடுமாற்றம் குறித்து பேசிய இந்திய முன்னாள் வீரர் சஞ்சய் பங்கர் கூறுகையில், "ரிஷப் பண்ட் டெஸ்ட் கிரிக்கெட்டில் அவர் சிறப்பான பேட்ஸ்மேன் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்த ஐ.பி.எல். சீசனில் பெரும்பாலான போட்டிகளில் அவர் ஸ்டப்புகளுக்கு பின்னே அடிக்க முயற்சித்து அவுட்டானதை கவனித்தேன். ரிஷப் பண்ட் விளையாடிய சிறந்த போட்டிகளில் எல்லாம் அவர் கவர் திசையில் அல்லது இறங்கி சென்று நேராக அல்லது மிட் விக்கெட் அல்லது ஸ்கொயர் திசைகளில் அடித்திருப்பார்.

ஆனால் இப்போது அவர் ரிவர்ஸ் ஸ்வீப் போன்ற ஷாட்டுகளை அதிகம் முயற்சிக்கிறார். அந்த வகையில் தன்னுடைய சிறந்த ஆட்டத்தை மறந்துள்ள பண்ட் குழப்பத்தில் சிக்கியுள்ளார் என்று நான் கருதுகிறேன்" என கூறினார்.

## ரசிகர்களுக்கு பிரேவிஸ் நன்றி

10 அணிகள் இடையிலான 18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்றது. இந்நிலையில், தற்போது இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நிலவுவதால் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியை ஒருவாரம் நிறுத்தி வைப்பதாக இந்திய கிரிக்கெட் வாரியம் அறிவித்தது. இந்திய வீரர்களில் பலர் உடனடியாக தங்களது வீடுகளுக்கு திரும்பியதாகவும், வெளிநாட்டு வீரர்களும் விமானம் மூலம் தங்களது நாட்டுக்கு புறப்பட்டதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

இந்த நிலையில், இந்த நிலையில் ரசிகர்களுக்கு சென்னை வீரர் டெவால்ட் பிரேவிஸ் நன்றி தெரிவித்துள்ளார் . இது தொடர்பாக அவர் கூறியதாவது, சென்னை அணிக்கும், பயிற்சியாளர்களுக்கும், ரசிகர்களுக்கும் மிகப்பெரிய நன்றி. சேப்பாக்கம் மைதானத்தில் விளையாடிய அனுபவம் மிகவும் அற்புதமாக இருந்தது. இந்தியா முழுவதும் இருந்து எனக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி.

இங்கு செலவழித்த நாட்கள் என் மனதிற்கு மிகவும் நெருக்கமானவை. சென்னையில் இருந்த நாட்கள் என் வாழ்நாள் முழுமைக்குமானவை. மீண்டும் விரைவில் உங்களை சந்திக்கிறேன். என தெரிவித்துள்ளார் .

## மேடிசன் கீஸ் அதிர்ச்சி தோல்வி

இத்தாலி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ரோமில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவின் 3-வது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான மேடிசன் கீஸ் (அமெரிக்கா), சக நாட்டவரான பெய்டன் ஸ்டெர்ன்ஸ் உடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த மோதலில் முதல் 2 செட்டுகளை ஆளுக்கொன்றாக கைப்பற்றினர். இதனால் ஆட்டத்தில் பரபரப்பு தொற்றிக்கொண்டது.

இதனையடுத்து மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நடைபெற்ற 3-வது செட்டை பெய்டன் ஸ்டெர்ன்ஸ் கைப்பற்றி கீசுக்கு அதிர்ச்சி அளித்தார். பெய்டன் ஸ்டெர்ன்ஸ் இந்த ஆட்டத்தில் 2-6, 6-2 மற்றும் 7-6 என்ற செட் கணக்கில் போராடி வெற்றி பெற்றார். அதிர்ச்சி தோல்வி கண்ட மேடிசன் கீஸ் வெளியேறினார்.

### பாக். நடத்திய தாக்குதலில்

# இதுவரை 22 பேர் பலி

**பாகிஸ்தான், மே 11-**

பாகிஸ்தானில் பயங்கரவாத முகாம்கள் மீது இந்திய ராணுவம் மேற்கொண்ட 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கைக்கு பிறகு ஜம்மு-காஷ்மீரில் எல்லையோர கிராமங்களைக் குறிவைத்து அந்நாட்டுப் படையினர் சிறிய ரக பீரங்கிகள் மற்றும் மோட்டார் குண்டுகள் மூலம் அத்துமீறி நடத்தி வரும் தாக்குதலில் இதுவரை 22 பேர் பலியானதாக தகவல் வெளியாகி உள்ளது.

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு பழிதீர்க்க, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் பயங்கரவாத உள்கட்டமைப்புகளைக் குறிவைத்து இந்திய ராணுவம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவில் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல் 'ஆபரேஷன் சிந்தூர்' நடத்தியது.

இதனிடையே, வடக்கு காஷ்மீரில் பாரமுல்லா மாவட்டத்தின் உரி செக்டாரில் வியாழக்கிழமை இரவு பாகிஸ்தான் குண்டுவீச்சில் ஜம்மு-காஷ்மீரின் பாரமுல்லா, பூஞ்ச் மாவட்டங்களில் இருவர் உயிரிழந்தனர். 5 பேர் காயமடைந்தனர். ஜம்மு அருகே பாகிஸ்தான் நிலைகள், பயங்கரவாத ஏவுதளங்கள் அழிப்பு

இதற்கு பதிலடி கொடுத்த இந்திய ராணுவத்தினர் பாகிஸ்தானின் ஏவுகணைகளை நடுவானிலேயே அழித்தனர். பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்திலிருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பாகிஸ்தானின் முக்கிய தளமான ராவல்பிண்டி "நூர் கான்" விமானப்படை தளம், சக்வால் நகரில் உள்ள முரிட் விமானத் தளம் மற்றும் பஞ்சாப் மாகாணத்தின் ஜாங் மாவட்டத்தில் உள்ள ரஃபிகி விமானத் தளம் என மூன்று விமானப்படை தளங்களையும் இந்தியா தாக்கியதாக பாகிஸ்தான் ராணுவம் கூறியுள்ளது.

அதன் தொடர்ச்சியாக சனிக்கிழமை அதிகாலை சர்வதேச எல்லை மற்றும் பாகிஸ்தானுடனான எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு பகுதியில் 26 இடங்களில் பாகிஸ்தான் தாக்குதல் நடத்திய உடனேயே இந்தியா பதிலடித் தாக்குதல்களை நடத்தி ஒவ்வொரு தாக்குதலையும் வெற்றிகரமாக முறியடித்தது. கட்டுப்பாட்டுக் கோட்டின் பல இடங்களில் இடைவிடாத துப்பாக்கிச் சூடு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதனிடையே, ஜம்மு-காஷ்மீரின் ரஜௌரி பகுதியில் சனிக்கிழமை காலை பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில் மாவட்ட வளர்ச்சித் துறை கூடுதல் ஆணையர் பலியானர். அவரது வீடு சேதமடைந்தன. இந்நிலையில், பாகிஸ்தானில் பயங்கரவாத முகாம்கள் மீது இந்திய ராணுவம் மேற்கொண்ட 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கைக்கு பிறகு ஜம்மு-காஷ்மீரில் எல்லையோர கிராமங்களைக் குறிவைத்து அந்நாட்டுப் படையினர் சிறிய ரக பீரங்கிகள் மற்றும் மோட்டார் குண்டுகள் மூலம் அத்துமீறி நடத்தி வரும் தாக்குதலில் இதுவரை 22 பேர் பலியானதாக பாதுகாப்பு வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இந்திய ராணுவத்திற்கு துணை நிற்கும் பேரணியின் முடிவில், ஒற்றுமையின் அடையாளமாக ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரிகள் - லெப்டினண்ட் ஜெனரல் அனந்த நாராயணன், பிரிகேடியர் ரவி, பிரிகேடியர் ஜெயலக்ஷ்மி, லெப்டினண்ட் கர்னல் ரமேஷ் ஆகியோருக்கு நினைவுச் சின்னம் வழங்கினார். இந்நிகழ்வின்போது, துணை முதலல்வர் உதயநிதி ஸ்டாலின் உடனிருந்தார்.

### தமிழகத்தில் 3, 5, 8-ம் வகுப்பு

# மாணவர்கள் கற்றல் நிலை தேசிய சராசரியை விட சிறப்பாக உள்ளது

## மாநில திட்டக்குழு தகவல்

**சென்னை, மே 11-**

தேசிய சராசரியைவிட தமிழகத்தில் 3, 5, 8-ம் வகுப்பு மாணவர்களின் கல்வித் தரம் சிறப்பாக உள்ளதாக மாநில திட்டக் குழு மற்றும் பள்ளிக் கல்வித் துறை இணைந்து நடத்திய கற்றல் அடைவு ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கற்றல் திறனை அளவிடுவதற்காக அவ்வப்போது 'ஸ்லாஸ்' எனும் மாநில கற்றல் அடைவுத் தேர்வு நடத்தப்படுகிறது. இதற்கிடையே மத்திய கல்வி அமைச்சகம் மற்றும் சில தனியார் அமைப்புகள் நடத்திய ஆய்வில் தமிழகத்தில் பள்ளி மாணவர்களின் கற்றல் நிலை சற்று பின்தங்கியிருப்பதாக தகவல்கள் வெளியாகின.

இதையடுத்து பள்ளி மாணவர்களின் கற்றல் திறனை முழுமையாக ஆராய்வதற்காக ஏற்கெனவே நடத்திவரும் 'ஸ்லாஸ்' தேர்வை மாநிலத் திட்டக்குழுவுடன் இணைந்து விரிவாக மாநிலம் முழுவதும் உள்ள 45,924 அரசு, அரசு உதவி பள்ளிகளிலும் நடத்த முடிவானது. அதன்படி நடப்பாண்டு 3, 5, 8-ம் வகுப்பு பயிலும் 15.78 லட்சம் மாணவர்களில் 9 லட்சத்து 80,341 (66%) பேர்களிடம் ஸ்லாஸ் தேர்வு பிப்ரவரி 4 முதல் 6-ம் தேதி வரை நடத்தப்பட்டது. இந்த ஆய்வுத் தரவுகளின்படி தயாரிக்கப்பட்ட மாநில அளவிலான கற்றல் அடைவுத்தேர்வு-2025 எனும் தொகுப்பறிக்கையை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம், மாநிலத் திட்டக்குழுவின் செயல் துணைத் தலைவர் ஜெ.ஜெயரஞ்சன் சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று (மே 10) சமர்பித்தார். இந்நிகழ்வில் துணை முதல்வர் உதயநிதி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் மற்றும் துறைசார்ந்த அதிகாரிகள் உடனிருந்தனர்.

அந்த அறிக்கையில், ஒட்டுமொத்தமாக 2021-ம் ஆண்டு மத்திய அரசின் நாஸ் ஆய்வுடன் ஒப்பிடுகையில் தமிழகத்தின் கற்றல் நிலை தேசிய சராசரியைவிட உயர்ந்துள்ளது. குறிப்பாக 'எண்ணும் எழுத்தும்' உட்பட சில திட்டங்களால் 3, 5-ம் வகுப்பு மாணவர்களின் கற்றல் அடைவு நிலை சிறப்பாக நிலையில் உள்ளது. அதேநேரம் 8-ம் வகுப்பு கணிதத்தில் மட்டும் மாணவர்கள் சற்று பின்தங்கியிருப்பது தெரிய வந்துள்ளது. இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித் துறை செயலர் பி.சந்திரமோகன், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் மாநிலத் திட்ட இயக்குநர் மா.ஆர்த்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# ஜனாதிபதியின் சபரிமலை பயணம் ரத்து

**புதுடில்லி, மே 11-**

இந்தியா-பாகிஸ்தான் போர்ப் பதற்றத்தால் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவின் சபரிமலை பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

சபரிமலை ஐயப்பன் கோயிலில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு மே 19ஆம் தேதி சாமி தரிசனம் செய்ய திட்டமிட்டிருந்தார். திட்டத்தின் படி, குடியரசுத் தலைவர் முர்மு கேரள மாநிலம், நிலக்கல் ஹெலிபேடில் தரையிறங்கி, பின்னர் பம்பாவிலிருந்து சபரிமலைக்கு மலையேற்றப் பாதையில் ஏற இருந்தார்.

இதையொட்டி முர்முவின் பயன்பாட்டிற்காக சன்னிதானத்தில் உள்ள அதன் அலுவலகத்தில் இரண்டு அறைகளை திருவிதாங்கூர் தேவசம் வாரியம் புதுப்பித்திருந்தது. மேலும் பாதுகாப்பு காரணங்களுக்காக ஏப்ரல் 18 மற்றும் 19 ஆகிய தேதிகளில் பொது தரிசனத்திற்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. தற்போது குடியரசுத் தலைவரின் வருகை ரத்து செய்யப்பட்டதால் இந்த நாள்களில் பக்தர்களின் பொது தரிசனத்திற்கு மீண்டும் அனுமதி வங்கப்பட்டிருக்கிறது.

# பள்ளி மாணவர்களுக்கு வழங்க 4.19 கோடி பாடப்புத்தகங்கள் தயார்

## பள்ளிக்கல்வித்துறை அறிவிப்பு

**சென்னை, மே 11-**

பள்ளி மாணவர்களுக்கு வழங்குவதற்காக 4.19 கோடி பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்டு அந்தந்த மாவட்ட கிடங்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் அனைத்து வகை அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் தமிழ் வழியில் இயங்கும் வகுப்புகள் ஆகியவற்றில் 1 முதல் பிளஸ்-2 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பாடநூல்கள், நோட்டுப் புத்தகங்கள், காலணிகள் உள்ளிட்ட நலத்திட்டப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், நடப்பு கல்வியாண்டில் கோடை விடுமுறை நிறைவடைந்து அனைத்துப் பள்ளிகளும் ஜூன் முதல் வாரத்தில் திறக்கப்படவுள்ளன. அவர்களுக்கு வழங்குவதற்காக தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சார்பில் 4.19 கோடி பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்டு அந்தந்த மாவட்ட கிடங்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் கூறியதாவது:-

இந்த ஆண்டு ஒன்று முதல் பிளஸ் 2 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்குவதற்காக 495 தலைப்புகளில் மொத்தம் 4.19 கோடி பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளன. அவற்றில் 2.72 கோடி பாடப்புத்தகங்கள் மாணவர்களுக்கு விலையில்லாமல் வழங்கப்படும். எஞ்சியுள்ள 1.47 கோடி பாடநூல்கள் விற்பனைக்காக அச்சிடப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக 64 லட்சம் மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் விநியோகிக்கப்படும்.

அனைத்து மாவட்ட கிடங்குகளிலும் உள்ள பாடப் புத்தகங்கள் ஒரு வாரத்துக்குள் அனைத்து அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் நேரடியாக அனுப்பி வைக்கப்படும். இதையடுத்து கோடை விடுமுறைக்குப் பிறகு வரும் ஜூன் மாதம் பள்ளிகள் திறக்கப்படும் போது முதல் நாளே மாணவர்களுக்கு பாடப் புத்தகங்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

# நாம் தமிழர் கட்சிக்கு விவசாயி சின்னம்: தலைமை தேர்தல் ஆணையம் அறிவிப்பு

**புதுடில்லி, மே 11-**

நாம் தமிழர் கட்சிக்கு ஏர் கலப்பையுடன் கூடிய விவசாயி சின்னத்தை புதிய சின்னமாக ஒதுக்கி தலை மை தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

கடந்த 14 ஆண்டுகளாக அங்கீகரிக்கப்படாத கட்சியாக இருந்து வந்த நாம் தமிழர் கட்சி கடந்த லோக்சபா தேர்தலில் 8.22 சதவீதம் ஓட்டுகளை பெற்றது. இதையடுத்து நாம் தமிழர் கட்சியை மாநில கட்சியாக இந்திய தேர்தல் ஆணையம் அங்கீகரித்து அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. 2016ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் இரட்டை மெழுகுவர்த்தி சின்னத்தில் நாம் தமிழர் போட்டியிட்டது. அப்போது கட்சிக்கு இரட்டை மெழுகுவர்த்தி சின்னம் கேட்டு தேர்தல் ஆணையத்திடம் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால் அந்த சின்னம் வழங்கப்படாமல், அதற்கு பதிலாக தான் கரும்பு விவசாயி என்ற சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அங்கீகாரம் பெற்றாலும் நாம் தமிழர் கட்சிக்கு கேட்ட கரும்பு விவசாயி அல்லது புலி சின்னம் கிடைக்காமல் இருந்தது. சின்னம் கேட்டு தாமதமாக விண்ணப்பித்ததால் அந்த சின்னங்கள் வேறு கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டு விட்டது. அதை தர முடியாது என்று தேர்தல் ஆணையம் அறிவித்து இருந்தது.

இந்நிலையில் நாம் தமிழருக்கு ஏர் கலப்பையுடன் கூடிய விவசாயி சின்னத்தை தேர்தல் ஆணையம் வழங்கி உள்ளது. அதற்கான கடித்தையும் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. இந்த அறிவிப்பை நாம் தமிழர் கட்சி தமது அதிகாரப்பூர்வ தகவல் தொழில் நுட்ப பிரிவு வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

சின்னம் தொடர்பான விவகாரத்தில் கரும்பு விவசாயி சின்னம் கிடைக்காத தருணத்தில் நடைபெற்ற தேர்தல்களில் நாம் தமிழர், ஒலி வாங்கி (மைக்) சின்னத்தில் போட்டியிட்டது. தற்போது ஏற்கனவே இருந்த கரும்பு விவசாயி சின்னத்துக்கு பதில் ஏர் கலப்பையுடன் கூடிய விவசாயி சின்னம் ஒதுக்கப்பட்டு உள்ளது.



அருப்புக்கோட்டை அமுதலிங்கேஸ்வரர் திருக்கோவிலில் சித்திரை மாத மகாசனி பிரதோஷத்தை முன்னிட்டு பிரதோஷ மூர்த்தி கோவிலில் வலம் வந்து சாமி பொதுமக்களுக்கு அருள் பாலித்த காட்சி.

# எடப்பாடி பிறந்த நாளை முன்னிட்டு அன்னதானம் - நீர், மோர் பந்தல் திறப்பு




**திண்டுக்கல், மே 11-**

அ.தி.மு.க. பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியின் 71-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கட்சி பொருளாளர், திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சி.சீனிவாசன் வழிக்காட்டுதலின் பேரில், திண்டுக்கல் மேற்கு மாவட்டம் வேடசந்தூர் சட்டமன்ற தொகுதி, வடமதுரை கிழக்கு, மேற்கு ஒன்றியங்கள் சார்பாக கொம்பேறிபட்டி, பாகாநத்தம் ஊராட்சிகளில் மக்களுக்கு அன்னதானத்தையும், நீர் மோர் பந்தலையும் இளைஞர் பாசறை இளம்பெண்கள் பாசறை மாநில செயலாளர் டாக்டர் வி.பி.பி. பரமசிவம் வழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தென்னம்பட்டி பழனிச்சாமி, மாவட்ட விவசாய அணி செயலாளர் டி.சி. ராஜமோகன், அய்யலூர் பேரூர் செயலாளர் ராகுல் பாபா, எரியோடு பேரூர் செயலாளர் அறிவாளி, வடமதுரை ஒன்றிய செயலாளர்கள் தெண்டாயுதம், லட்சுமணன், வேடசந்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பழனியம்மாள் சவடமுத்து உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# கமுதி அருகே அகத்தாரிருப்பு வேப்பமரத்து ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் பொங்கல் விழா - பொதுமக்கள் முளைப்பாரி ஊர்வலம்



**கமுதி, மே 11-**

ராமநாதபுரம் மாவட்டம், கமுதி அருகே அகத்தாரிருப்பு கிராமத்தில் வேப்பமரத்து ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் சித்திரை பொங்கல் திருவிழா கடந்த வாரம் காப்பு கட்டுடன் துவங்கியது. இப்பகுதி பொதுமக்கள் ஏராளமானோர் காப்பு கட்டி விரதத்தை துவங்கினர். பின்னர் நேற்று முன்தினம் கோவில் முன்பு ஏராளமான பொங்கல் வைத்து வழிபட்டனர். பின்னர் ஏராளமான பக்தர்கள் அக்னி சட்டி நேர்த்திக்கடன் செலுத்தி வழிபட்டனர். இரவு சக்தி கரகத்துடன் முளைப் பாரியை ஊர்வலமாக எடுத்து வந்து கோவில் முன்பு வைத்தனர்.நேற்று மாலை முளைப்பாரி ஊர்வலம் நடைபெற்றது. முன்னதாக கோவில் முன்பு வைக்கப்பட்டிருந்த முளைப்பாரியை சுற்றிலும் ஏராளமான பெண்கள் பக்தி பாடல் பாடி கும்மியடித்து வழிபட்டனர்.

பின்னர் முளைப்பாரியை தலையில் சுமந்து ஊர்வலமாக கிராமத்தின் முக்கிய வழியாக சென்று ஊரணியில் கரைத்தனர். பின்னர் கோவில் முன்பு நடைபெற்ற பூஜையில், அனைவரும் கலந்து கொண்டனர்.அனைவருக்கும் மற்றும் பிரசாதம் அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்த திருவிழாவில் சென்னை, மதுரை மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள இக்கிராமத்தை சேர்ந்த 2000 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இரவு கலைநிகழ்ச்சி நடைபெற்றது. திருவிழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் யாதவ சமுதாயத்தினர் செய்திருந்தனர்.

# மதுரை, திருவண்ணாமலைக்கு சிறப்பு ரயில்கள் - தெற்கு ரயில்வே அறிவிப்பு

**சென்னை, மே 11-**

மதுரை, திருவண்ணாமலைக்கு சிறப்பு ரயில்களை தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

தெற்கு ரயில்வே சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

அழகர் திருவிழாவை முன்னிட்டு தாம்பரத்தில் இருந்து நேற்று இரவு 11.30 மணிக்கு புறப்படும் அதிவிரைவு சிறப்பு ரயில் (எண்: 06049) மறுநாள் காலை 7.55 மணிக்கு மதுரை சென்றடையும். மறுமார்க்கமாக இந்த ரயில் (எண்: 06050) மதுரையில் இருந்து மே 12-ந் தேதி இரவு 11.30 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 7.50 மணிக்கு தாம்பரம் வந்தடையும். இந்த ரயில் தாம்பரத்தில் இருந்து செங்கல்பட்டு, மேல்மருவத்தூர், திண்டிவனம், விழுப்புரம், விருத்தாசலம், அரியலூர், ஸ்ரீரங்கம், திருச்சி, மணப்பாறை, திண்டுக்கல், கொடைக்கானல் சாலை வழியாக மதுரை சென்றடையும். சித்திரை மாத பவுர்ணமி கிரிவலத்தை முன்னிட்டு தாம்பரத்தில் இருந்து மே 11-ந் தேதி காலை 11 மணிக்கு புறப்படும் முன்பதிவில்லா சிறப்பு மெமு விரைவு ரயில் (எண்: 06137) அன்று பிற்பகல் 3.30 மணிக்கு திருவண்ணாமலை சென்றடையும். மறுமார்க்கமாக இந்த ரயில் (எண்: 06138) அதேநாளில் திருவண்ணாமலையில் இருந்து மாலை 5 மணிக்கு புறப்பட்டு இரவு 8.45 மணிக்கு தாம்பரம் வந்தடையும்.

இந்த ரயில் தாம்பரத்தில் இருந்து செங்கல்பட்டு, மேல்மருவத்தூர், திண்டிவனம், விழுப்புரம், திருக்கோவிலூர் வழியாக திருவண்ணாமலை சென்றடையும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஸ்ரீவில்லி., ஆண்டாள் சூடிய மாலை கள்ளழகருக்கு அனுப்பி வைப்பு



**விருதுநகர், மே 11-**

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் சூடி களைந்த வஸ்திரம் மாலை கைக்கிளி ஆகிய மங்களப் பொருட்கள் மதுரை சித்திரை திருவிழாவின் போது வைகை ஆற்றில் தங்க குதிரையின் மீது அமர்ந்து இறங்கும் கள்ளழகர் சூடி கொள்வதற்காக கொண்டு செல்லப்பட்டது.இந்த நிகழ்ச்சியில் கோவில் செயல் அலுவலர் சக்கரை அம்மாள் கண்காணிப்பாளர் ஆவுடையம்மாள் கோயில் பட்டாச்சாரியார்கள் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீவில்லிபுத்தூர் மடவார் வளாகம்

# வைத்தியநாத சுவாமி கோவிலில் சித்திரை வளர்பிறை பிரதோஷம்



**விருதுநகர், மே 11-**

வைத்தியநாத சுவாமி கோவிலில் சித்திரை வளர்பிறை பிரதோஷம் நடைபெற்றது.

இந்தியாவில் உள்ள சிவாலயங்களில் தமிழ் வருட முதல் மாதமான சித்திரை மாதம் வளர்பிறை சனி பிரதோஷம் மகா பிரதோஷம் என அழைக்கப்படும்.

இந்த பிரதோஷத்தன்று சிவாலயங்களுக்கு சென்று நந்தி பகவானையும் சிவனையும் தரிசனம் செய்து அபிஷேகம் ஆராதனைகளை கண்டுகளித்தால் நம்முடைய முன்னோர் செய்த பாவம் நாம் செய்த பாவம் அனைத்து நீங்கி நன்மைகளும் கிடைக்கும் என்பது ஐதீகம். இந்த நிலையில் சித்திரை மாத பிரதோஷம் பல மடங்கு சிறப்புடையதாகும்.அதன்படி ஸ்ரீவில்லிபுத்தூர் மடவார் வளாகம் வைத்தியநாத சுவாமி திருக்கோயிலில் சித்திரை மாத வளர்பிறை பிரதோஷ விழா சிறப்பாக நடைபெற்றது.

முன்னதாக லிங்க வடிவில் வீற்றிருக்கும் மூலவருக்கு எதிரே உள்ள பிரம்மாண்டமான நந்தியம் பெருமானுக்கு 16 வகையான நறுமணப் பொருள்கள் கொண்டும் பால் தயிர் பன்னீர் மஞ்சள் இளநீர் தேன் விபூதி ஆகிய பொருட்களைக் கொண்டும் அபிஷேகங்கள் நடைபெற்றது. தொடர்ந்து மூலவரான வைத்தியநாத சுவாமிக்கும் அபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து நந்தி பகவானுக்கு சர்வ அலங்காரம் நடைபெற்று.

தீபா ஆராதனை கட்டப்பட்டது கோயில் சிவாச்சாரியார்கள் பூஜைகளை வெகு விமர்சையாக செய்திருந்தனர். இதனை தொடர்ந்து பக்தர்களுக்கு அபிஷேக பால் பிரசாதமாக வழங்கப்பட்டது. சித்திரை மாத சனி மகா பிரதோஷ விழா ஏற்பாடுகளை கோயில் தக்கார் சர்க்கரை அம்மாள் செயல் அலுவலர் முத்து மணிகண்டன் மற்றும் கோயில் அலுவலர்களும் கோவில் பணியாளர்களும் செய்திருந்தனர். தொடர்ந்து சுவாமி உலா நிகழ்ச்சியும் நடைபெற்றது.

# பி.எஸ்.என்.ஏ பொறியியல் தொழில்நுட்ப கல்லூரியில் 37-வது பட்டமளிப்பு விழா




**திண்டுக்கல், மே 11-**

திண்டுக்கல் பி.எஸ்.என்.ஏ பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் இளநிலை பட்டதாரி மாணவர்களுக்கான 37-ஆவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இந்த விழாவில் கட்டிடப் பொறியியல், இயந்திரப் பொறியியல், மின் மற்றும் மின்னணு பொறியியல் துறைகளைச் சேர்ந்த சுமார் 159 மாணவ, மாணவிகள் தங்கள் பட்டங்களைப் பெற்றனர். இவ்விழாவில், அண்ணா பல்கலைக்கழகத் தேர்வில் தரவரிசைப் பட்டியலில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற கட்டிடப் பொறியியல் துறையிலிருந்து மூன்று இளநிலை மாணவர்கள், இயந்திரப் பொறியியல் துறையிலிருந்து நான்கு இளநிலை மாணவர்கள், மின் மற்றும் மின்னணுப் பொறியியல் துறையிலிருந்து நான்கு இளநிலை மாணவர்கள் என மொத்தமாக 11 மாணவர்கள் இடம் பெற்றனர். அவர்களுக்கு கல்லூரியின் சார்பாக தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது.

இவ்விழாவிற்கு ஈரோடு சிடீடெக்னோடெக்ஸ் எல்எல்பி நிர்வாக இயக்குனர் டி.வெங்கடேஸ்வரன் என்கிற டி.குமார், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பட்டங்களையும், பரிசுகளையும் வழங்கினார். இவ்விழாவானது கல்லூரியின் தலைவர், கே.தனலெட்சுமி அம்மாள், முதன்மைத் தலைவர், ஆர்.எஸ்.கே.ரகுராம் மற்றும் டிரஸ்டி சூர்யா ஆகியோரது தலைமையில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் டி.வாசுதேவன் வரவேற்புரை ஆற்றினார். இவ்விழாவின் சிறப்பு விருந்தினர் வெங்கடேஸ்வரன் அவர்கள் மாணவர்களிடையே சிறப்புரை ஆற்றினார். இந்த ஆண்டு நடைபெற்று வரும் வளாக வேலைவாய்ப்பில் தங்கள் படிப்பு முடியும் முன்பே கட்டிடப் பொறியியல், இயந்திரப் பொறியியல், மின் மற்றும் மின்னணு பொறியியல் துறைகளைச் சேர்ந்த சுமார் 180 மாணவ, மாணவிகள் பல்வேறு பன்நாட்டு நிறுவனங்களில் வேலை வாய்ப்பை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விழாவின் இறுதியில் பி.எஸ்.என்.ஏ. கல்லூரி நிர்வாகம் பட்டங்களைப் பெற்ற அனைத்து மாணவ மாணவியற்களுக்கும் தங்களது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டது.

# எடப்பாடியார் பிறந்த நாளை முன்னிட்டு அம்மா பேரவை சார்பில் அன்னதானம்

## முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் வழங்கினார்



**திருமங்கலம், மே 11-**

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடியாரின் ஆணைக்கிணங்க, கட்சி அமைப்பு ரீதியிலான 82 மாவட்டங்களில் அம்மா பேரவையின் சார்பில் எல்லையில் போர் புரிந்திடும் ராணுவ வீரர்கள் நலமுடன் இருந்து வெற்றி பெறும் வகையில் சர்வ சமய பிரார்த்தனையும், எடப்பாடியாரின் பிறந்த நாளை முன்னிட்டு, நலத்திட்ட உதவிகள் வழங்கி ஒரு லட்சம் பேருக்கு அன்னதானம் வழங்கிடும் நிகழ்வும் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணை தலைவரும், அம்மா பேரவை செயலாளருமான ஆர்.பி.உதயகுமார் ஏற்பாட்டில் நடைபெற்றது.

மதுரை புறநகர் மேற்கு மாவட்ட அம்மா பேரவை சார்பில் டி.குன்னத்தூரில் உள்ள அம்மா கோவிலில், எல்லையிலுள்ள ராணுவ வீரர்கள் நலமுடன் இருக்க வேண்டி சர்வ சமய பிரார்த்தனை நடைபெற்றது. இதனை தொடர்ந்து நூற்றுக்கணக்கான இளைஞர் களுடன் இணைந்து இந்திய ராணுவ வீரர்கள் போரில் வெற்றி பெற்றிட வேண்டி கேக் வெட்டி பொது மக்களுக்கு வழங்கியும், பொது செயலாளர் எடப்பாடியாரின் பிறந்த நாளை முன்னிட்டு பத்தாயிரம் பேருக்கு அசைவ அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகளை சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் வழங்கினார்.

இதையடுத்து சட்டமன்ற எதிர்க்கட்சித் துணை தலைவர் ஆர்.பி.உதயகுமார் கூறுகையில்:-

இந்திய பிரதமர நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் போர்க்கால நடவடிக்கைகளுக்கு ஒரே தேசமாக நாம் அனைவரும் துணை நிற்க வேண்டிய தருணம் இது.இந்த பயங்கரவாத தாக்குதலுக்கு எதிர்வினையாக இந்தியா ஆபரேஷன் சித்தூர் நடத்திய பிறகு, இந்தியாவின் பல நகரங்களில் தாக்குவதற்கு பாகிஸ்தான் முற்பட்ட நிலையில், அதனை முறியடித்து நம் நாட்டு மக்களை காத்து வரும் மேன்மைமிகு ராணுவ படை வீரர்களுக்கும், நமக்காக எல்லையில் போர் புரியம் நம் ராணுவ வீரர்கள் நலமுடன் இருக்கவும் வெற்றி பெற வகையில் திருக்கோயில்கள், கிறிஸ்துவ ஆலயங்கள், மசூதிகளில் மும்மத வழிபாடு நடத்திட வேண்டும் என்று, வருங்கால முதலமைச்சர் எடப்பாடியார் ஆணையிட்டுள்ளார், அதன்படி இந்திய வீரர்கள் நீண்ட ஆயுளுடன் திகழ்ந்து வெற்றி பெற வேண்டும் என தமிழகம் முழுவதும் கழக ரீதியில் உள்ள 82 மாவட்டங்களிலும் எல்லையில் போர் புரியும் வீரர்களின் வெற்றிக்காக கழக அம்மா பேரவை சார்பில் சிறப்பு பிரார்த்தனை செய்துள்ளோம்.

இந்த இயக்கம் இன்னும் நூறாண்டுகள் மக்கள் பணியாற்ற வேண்டும் என்ற அம்மாவின் தாரக மந்திரத்துடன், கண் இமைக் காப்பது போல இந்த இயக்கத்தை காத்திட்டு, 50 ஆண்டுகால மக்கள் பணியில் மக்களுக்கு சேவை செய்து சாதனை படைத்த எடப்பாடியார் நீண்ட ஆயுளுடன் பல்லாண்டு கால வாழவும்,மீண்டும் எடப்பாடியார் தலைமையில், அம்மா ஆட்சி மலர பிரார்த்தனை செய்து கழக அமைப்பு ரீதியில் உள்ள 82 மாவட்டங்களில் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி ஒரு லட்சம் பேருக்கு அன்னதானம் வழங் கப் பட் டது. தற் பொழுது இங்கு பத்தாயிரம் பேருக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சிகளில் கழக அமைப்புச் செயலாளர் மகேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் பெரியபுள்ளான் என்ற செல்வம், முன்னாள் எம்.எல்.ஏக்கள் தமிழரசன் ,நீதிபதி,சரவணன், மாணிக்கம், கருப்பையா, மாநில அணி நிர்வாகிகள் புளியங்குளம் ராமகிருஷ்ணன், வெற்றிவேல், தனராஜன் ,ராஜேஷ் கண்ணா, சிவசுப்பிரமணியன், அன்னபூர்ணா தங்கராஜ் ,தேனி நாடாளுமன்ற வேட்பாளர் நாராயணசாமி, ஆண்டிபட்டி லோகி ராஜன், வரதராஜன், கம்பம் சிவக்குமார், மாவட்ட கழக நிர்வாகிகள் முருகன், தமிழ் செல்வம், திருப்பதி, உஷா,ஒன்றிய கழக செயலாளர்கள் அன்பழகன், ராமசாமி,கண்ணன், பிரபுசங்கர், ராமையா,மாவட்ட அணி நிர்வாகிகள் தமிழழகன்,பேரையூர் ராமகிருஷ்ணன், சிங்கராஜ் பாண்டியன், சரவணபாண்டி, பாஸ்கரன், ஜகாங்கிர், துரைப்பாண்டி மற்றும் லதா ஜெகன், செல்வம், சுமதி சாமிநாதன், முனியாண்டி அழகர்சாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ராமேசுவரம் அருகே

# இலங்கைக்கு கடத்த பதுக்கி வைத்திருந்த கஞ்சாவை பறிமுதல் செய்த போலீசார்



**மண்டபம், மே 11-**

மண்டபம் அருகே கடலோரப் பகுதியில் இருந்து இலங்கைக்கு கடத்தல் பொருள் கடத்த போவதாக கிடைத்த தகவல் பேரில் அப்பகுதிக்கு வந்த மாநில போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலீஸார்கள் அப்பகுதியில் பதுக்கி வைத்திருந்த 176 கிலோ கஞ்சா பார்சலை பறிமுதல் செய்து இது தொடர்பாக மூவரையும் கைது செய்தனர் . இது தொடர்பாக மேலும் பல்லை தேடி வருகின்றனர்.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் வேதாளை கடற்கரை பகுதியில் இருந்து இலங்கைக்கு கடத்தல் பொருள்கள் கடத்தபோவதாக சென்னையிலுள்ள மாநில போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலிசார்களுக்கு தகவல் கிடைத்துள்ளது. இதனைத் தொடர்ந்து நேற்று வெள்ளிக் கிழமை இரவு மண்டபம் அருகே வேதாளை ஊராட்சியில் அமைந்துள்ள கடலோரப் பகுதியை கண்காணிக்க தொடங்கினார்கள்.அப்போது இடையர் வலசை கிராமம் பகுதியில் நள்ளிரவு 1 மணியளவில் வடக்கு கடலோரப்பகுதி அருகாமையில் அமைந்துள்ள ரயில் தண்டவாளை பகுதியில் ஒரு கும்பல் கடத்தல் பொருட்களை கடத்துவதற்காக தயார் நிலையில் இருந்துள்ளனர் இதை அறிந்த போலீசார்கள் அவர்களை விரட்டிப் பிடித்தனர் அப்போது பெரிய பார்சல் ஒன்றையும் இது சம்பந்தமாக மூவரையும் மற்றும் கைது செய்தனர்.கும்பலில் பலர் தப்பி ஓடி தலைமறைவாயிட்டனர்.அதன் பின்னர் போலிசார் பார்சலை சோதனை செய்த போது போதைப் பொருளான கஞ்சா இருந்தது தெரியவந்தது. மேலும் மூவரிடம் போலிசார் தொடர்ந்த விசாரணையில் தலா 02 கிலோ எடை கொண்ட 88 பார்சல்கள் சுமார் 176 கிலோ கஞ்சாவை இருப்பதாகவும், இதன் மதிப்பு ரூ. 35 லட்சத்திற்கு மேல் இருக்கும் என தெரியவந்தது. மேலும் கைதான இவர்கள் மண்டலமாக வேதாளை வலையர்வாடி பகுதியை சேர்ந்த சத்தீஸ்வரன் (22), காமேஷ் (24), கண்ணன் (35) என தெரியவந்தது. அதன் பின்னர் போலீசார் மூவரையும் கைது செய்து சென்னை மாநில போதைப்பொருள் தடுப்பு பிரிவு காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். மேலும் 176 கிலோ கஞ்சா பார்சலை ராமநாதபுரம் மாவட்டம் போதை பொருள் தடுப்பு பிரிவு போலிசாரிடம் ஒப்படைத்னர். இது குறித்த போலீஸார்கள் வழக்கு பதிந்து தப்பி சென்று தலைமறைவானவர்களை தேடி வருகின்றனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று மாநில ஹஜ் குழு மூலம் முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்பவர்களுக்கு ஹஜ் மானியமாக 5,650 பயனாளிகளுக்கு தலா ரூ.25,000/- வீதம் மானிய தொகை வழங்கிடும் அடையாளமாக 10 பயனாளிகளுக்கு ஹஜ் மானிய தொகைக்கான காசோலைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். அருகில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் எஸ்.எம்.நாசர், தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், சட்டமன்ற உறுப்பினர் ப.அப்துல்சமது, முதன்மைச்செயலாளர் சா.விஜயராஜ்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று மாநில திட்டக்குழுவின் துணைத்தலைவரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் மற்றும் செயல் துணைத்தலைவர் ஜெ.ஜெயரஞ்சன் ஆகியோர் சந்தித்து, மாநில திட்டக்குழுவினால் தயாரிக்கப்பட்ட கற்றலில் இருக்கும் இடைவெளிகளை கண்டறிவது மற்றும் மாநில அளவிலான அடைவு ஆய்வு அறிக்கையை வழங்கினர். அருகில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், முதன்மைச்செயலாளர் பி.சந்திரமோகன், இயக்குநர் எம்.ஆர்த்தி உள்ளனர்.

## தேச ஒற்றுமைக்கான மக்கள் பேரணி:

# முதல்வருக்கு கவர்னர் ரவி பாராட்டு

சென்னை, மே 11-

தேசத்துடனான தமிழக மக்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் பிரமாண்ட மக்கள் பேரணியை நடத்துவதற்காக முதல்-அமைச்சருக்கு கவர்னர் ரவி நன்றிகளை தெரிவித்து கொண்டார்.

ஜம்மு மற்றும் காஷ்மீரில் பஹல்காம் பகுதியில் கடந்த ஏப்ரல் 22-ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் சுற்றுலாவாசிகள் 26 பேர் கொல்லப்பட்டனர். காஷ்மீரில் பஹல்காமில் நடந்த தாக்குதலுக்கு இரு வாரங்களுக்கு பின்னர் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் மீது இந்திய ராணுவம் பதிலடியாக பயங்கரவாத இலக்குகளை குறிவைத்து, தாக்குதலை நடத்தியது. இந்த சம்பவத்திற்கு பின்பு, இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே போர் பதற்ற சூழல் உருவாகி உள்ளது.

இந்நிலையில், இந்திய ஆயுத படைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில், சென்னையில் உள்ள டி.ஜி.பி. அலுவலகத்தில் இருந்து பிரமாண்ட மக்கள் பேரணி நடைபெறுகிறது. இதற்கு கவர்னர் ரவி பாராட்டு தெரிவித்து உள்ளார்.

இதுபற்றி அவர் வெளியிட்ட எக்ஸ் சமூக ஊடக செய்தியில், பாகிஸ்தானிய ராணுவ ஆக்கிரமிப்பு செயல்களுக்கு எதிராக நாட்டை துணிச்சலுடனும் வெற்றிகரமாகவும் பாதுகாக்கும் இந்திய ஆயுத படைகளுடன் நமது 8 கோடி தமிழ்நாட்டு மக்களின் தெளிவான ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில் பிரமாண்டமான மக்கள் பேரணியை நடத்துவதற்காக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு மனமார்ந்த நன்றிகள்.

நமது ஆயுத படைகளுடன் நமது தேசம் ஒற்றுமையாகவும் உறுதியாகவும் துணை நிற்பது, பயங்கரவாதத்தின் அனைத்து முனைகளையும் அழித்தொழித்து நமது தேசிய இறையாண்மையை பாதுகாப்பதற்கான நமது ஈடுபாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது என கவர்னர் ரவி தெரிவித்து உள்ளார்.



சென்னை தரமணியில் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் ரூ.39.33 கோடி மதிப்பீட்டில் அதிநவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய 3 படப்பிடிப்பு தளங்களுக்கான கட்டுமான பணிகளை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் செயலாளர் வே.ராஜாராமன், இணை இயக்குநர் மு.மேகவர்ணம், தலைமை பொறியாளர் எஸ்.மணிகண்டன், எஸ்.முத்தமிழரசு ஆகியோர் உள்ளனர்.



சென்னை சைதாப்பேட்டை மாந்தோப்பு சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் முன்னோட்டமாக நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு மேற்கொண்டார். அருகில் முதன்மைச்செயலாளர் பி.செந்தில்குமார், இயக்குநர் ஏ.அருண்தம்புராஜ், டாக்டர்கள் டி.எஸ்.செல்வவிநாயகம், கோ.சாந்தகுமாரி, எம்.ஜெகதீசன், மண்டலக்குழு தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் ப.சுப்பிரமணி, தா.மோகன்குமார் உள்ளனர்.

# தமிழ்நாட்டில் வாரந்தோறும் மருத்துவ முகாம் நடைபெறும்

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு

சென்னை, மே 11-

தமிழகத்தில் வாரந்தோறும் மருத்துவ முகாம் நடைபெறும் என அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது: இந்த மாதம் முதல் ஜனவரி 4-ம் வாரம் வரை 1256 உயர் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட உள்ளது. இந்த முகாமை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் விரைவில் தொடங்கி வைப்பார். அதன்பிறகு ஒவ்வொரு மாவட்டத்திலும் வாரத்தில் ஒரு நாள் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை முகாம்கள் இயங்கும். இந்த மாதம் முதல் ஜனவரி 2026 வரை திட்டமிடப்பட்டு உள்ளது.

இந்த முகாம்களில் ஈ.சி.ஜி. இதய சுருள் அறிக்கை, எக்கோ கார்டியோகிராம், எக்ஸ்ரே, அல்ட்ராசவுண்ட் ஸ்கேன், காசநோய் மற்றும் தொழுநோய் கண்டறிதல் சோதனைகள், ஆரம்பகட்ட புற்றுநோய் கண்டறிதல் பரிசோதனைகள், பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் புற்றுநோய் பரிசோதனை உள்ளிட்ட சோதனைகள் நடக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.



மதுரை மாநகர் மாவட்ட மேற்கு 6-ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் விளாங்குடி கே.ஆர்.சித்தன் ஏற்பாட்டில் விளாங்குடி பேருந்து நிலையம் அருகே பொதுமக்களுக்கு நீர், மோர், சர்பத் மற்றும் தர்பூசணி பழங்களை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், பரவை ராஜா, வி.பி.ஆர்.செல்வகுமார், வக்கீல் தமிழ்செல்வன், விநாயகமூர்த்தி, வி.கணேசன், பகுதி முத்துவேல், மலர்விழி, வட்ட செயலாளர்கள் கறிக்கடை மலைச்சாமி, பி.என்.சுந்தர்ராஜன், சேகவன், விஜயகுமார், நாராயணன், ஜஸ்டிஸ்ராஜா உள்ளனர்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் ஆணைக்கிணங்க, கழக ரீதியில் உள்ள 82 மாவட்டங்களில் கழக அம்மா பேரவையின் சார்பில், எல்லையில் போர் புரியும் ராணுவ வீரர்கள் நலமுடன் இருக்கவும் வெற்றி பெறும் வகையில் சர்வ மத பிரார்த்தனையும் மற்றும் எடப்பாடியாரின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி 1 லட்சம் பேருக்கு அன்னதானங்கள் வழங்க சட்டமன்ற எதிர்க்கட்சி துணை தலைவரும், மாநில அம்மா பேரவை செயலாளருமான ஆர்.பி.உதயகுமார் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் அ.தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# 32 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரோஜாக்களுடன் ஊட்டியில் ரோஜா கண்காட்சி தொடங்கியது

ஊட்டி, மே 11-

ஊட்டியில் உள்ள அரசு ரோஜா பூங்காவில் 20-வது ரோஜா கண்காட்சி நேற்று தொடங்கியுள்ளது.

மலைகளின் அரசியான நீலகிரி மாவட்டம் ஊட்டியில் நிலவும் இதமான காலநிலையை அனுபவிக்கவும், சுற்றுலா தலங்களை கண்டு ரசிக்கவும் தமிழகத்தின் பிற மாவட்டங்கள், வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் அதிகளவிலான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர்.

இந்த நிலையில் ஊட்டியில் உள்ள அரசு ரோஜா பூங்காவில் 20-வது ரோஜா கண்காட்சி நேற்று தொடங்கியுள்ளது. இந்த கண்காட்சியை அரசு கொறடா ராமச்சந்திரன் தொடங்கிவைத்தார். 4 ஆயிரம் வகைகளில், 32 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல வண்ண ரோஜா செடிகள் தயார்படுத்தப்பட்டுள்ளன.

இம்முறை, டால்பின், முத்து, சிப்பி, நத்தை, மீன், ஆமை, நண்டு, நட்சத்திர மீன் போன்ற பல்வேறு கடல்வாழ் உயிரினங்கள், வண்ண, வண்ண ரோஜா மலர்கள் கொண்டு அருமையாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த ரோஜா கண்காட்சி 3 நாட்கள் நடைபெற உள்ள நிலையில் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் ஆச்சரியத்துடன் கண்டுகளித்து வருகின்றனர்.

# இனி பயங்கரவாத செயல்களை போர் நடவடிக்கையாக கருத அரசு முடிவு?

## அரசு உயர் வட்டாரங்கள் தகவல்

புதுடெல்லி, மே 11-

எதிர்காலத்தில் நிகழும் எந்தவொரு பயங்கரவாதச் செயலும் இந்தியாவுக்கு எதிரான போர்ச் செயலாகக் கருதப்படும் என்றும், அதற்கேற்ப பதிலடி கொடுக்கப்படும் என்றும் இந்தியா முடிவு செய்துள்ளதாக அரசாங்கத்தின் உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியா - பாகிஸ்தான் இடையே பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், நாட்டின் பாதுகாப்பு தொடர்பான உயர்மட்ட ஆலோசனையில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று (மே 10) ஈடுபட்டார். பிரதமர் மோடியின் இல்லத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில், பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், பாதுகாப்புப் படைத் தலைவர், முப்படைகளின் தளபதிகள் கலந்து கொண்டனர்.

இந்தியாவின் 26 இடங்கள் மீது பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியதற்கு பதிலளிக்கும் விதமாக நேற்று (சனிக்கிழமை) அதிகாலை பாகிஸ்தானில் உள்ள நான்கு விமானப் படைத் தளங்களில் இந்தியா தாக்குதல் நடத்திய நிலையில், இந்த சந்திப்பு நடந்தது.

மேலும், பாகிஸ்தானின் பஞ்சாபில் உள்ள சர்கோதா விமானப்படை தளத்தின் மீது இந்தியா ஒரு சக்திவாய்ந்த பதிலடி தாக்குதலை நடத்தியது. மேலும், இந்திய விமானப் படை நடத்திய தாக்குதலில், ரஹிம் யார் கான் விமானநிலையம் முற்றாக சேதமடைந்தது.

அதோடு, இந்திய ராணுவம் பயங்கரவாத ஏவுதளங்களை தகர்த்துள்ளது.

இந்நிலையில், எதிர்காலத்தில் நிகழும் எந்தவொரு பயங்கரவாதச் செயலும் இந்தியாவுக்கு எதிரான போர்ச் செயலாகக் கருதப்படும் என்றும், அதற்கேற்ப பதிலடி கொடுக்கப்படும் என்றும் இந்தியா முடிவு செய்துள்ளதாக அரசாங்கத்தின் உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# சலால் அணையிலிருந்து மீண்டும் தண்ணீர் திறப்பு

ஸ்ரீநகர், மே 11-

இந்தியா-பாகிஸ்தான் ராணுவ மோதல்கள் மற்றும் சிந்து நதி நீர் ஒப்பந்தம் குறித்த விவாதங்களுக்கு மத்தியில் ஜம்மு-காஷ்மீரின் ரியாசியில் செனாப் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள சலால் அணையில் இருந்து திடீரென தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுடன் பதற்றம் நிலவும் சூழலில் ஜம்மு-காஷ்மீரின் ரியாசியில் செனாப் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள சலால் அணை மற்றும் ரம்பனியில் செனாப் ஆற்றின் குருக்கே கட்டப்பட்டுள்ள பக்லிஹார் நீர் மின் திட்ட அணையில் இருந்து திடீரென தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

சலால் அணையின் 5 மதகுகள் வழியே அதிகயளவிலான தண்ணீரை இந்திய அதிகாரிகள் திறந்துவிட்டுள்ளனர்.

அணைகளில் இருந்து திறக்கப்பட்டுள்ள தண்ணீர் பாகிஸ்தான் நோக்கி ஆர்ப்பரித்து பாய்ந்து செல்கிறது. பாகிஸ்தானுடன் பதற்றம் நிலவும் சூழலில் அணைகளில் இருந்து அதிகயளவில் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால் பாகிஸ்தானில் வெள்ள அபாயம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பதற்றமான சூழலில் இதுபோன்று வெள்ள நீரை திறந்துவிடுவதன் மூலமாக இது பாகிஸ்தான் மீதான மற்றொரு தாக்குதலாக கருதப்படுவதாகவும் செல்லப்படுகிறது.

இதனிடையே, கனமழை காரணமாக அணைகள் நிரம்பியதால் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.